பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மை: 19 ஆடி 3 றஜப் 30 இதழ்: 157

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 18-7-77

# 36 கைக்குண்டுகள், மூன்று ‘றிவோள்வரு’டன் ஏழு பேர் கைது!

கொழும்பு, ஞாயிறு

மருதானை பஞ்சிகாவத்தை வீதியிலுள்ள வீடொன்றில், 36 கைக்குண்டுகளையும் 3றிவோள்வர்கள், கத்தி, வாள் போன்ற பயங்கர ஆயுதங்களையும் மருதானைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இதுசம்பந்தமாக ஏழுபேர் உடனடியாகக் கைது செய்யப் பட்டுள்ளனர்.

மருதானை வீடொன்றில், பயங்கர ஆயுதங்கள் இருப்பதாகவும், குறிப்பிட்ட சில நோக்கத்துக்காக இந்த ஆயுதங்களைச் சிலர் பயன்படுத்த தயார் நிலையில் இருப்பதாகவும் குற்றத்தடுப்பு பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் குறிப்பிட்ட இடத்துக்குப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு விஜனகே தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி பயங்கர ஆயுதங்களைக் கைப்பற்றியதுடன் 7 பேரையும் கைதுசெய்தது.

இந்த ஏழுபேரையும் பொலிசார் கொழும்பு மாஜிஸ்திரேட் திரு ரணராஜா முன்னிலையில் ஆஜர் செய்தபோது, ஆயுதங்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் இவர்களைப் பிணையில் செல்ல அனுமதி வழங்கக் கூடாது என்று பொலிஸார் கேட்டுக்கொண்டனர். இதனைத் தொடர்ந்து இந்த ஆயுத சேகரிப்பு, தேர்தல் பின்னணி என்று கருதப்படுவதால் இவர்களை றிமான்டில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார். (ம)

# இ. போ. ச. ஊழியர்கள் வேலை நிறுத்தம் முடிவு

## வழமையான பஸ்சேவை இன்று மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,திங்கள்

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த பஸ் சாரதிகள், கண்டக்டர்களின் வேலை நிறுத்தம் நேற்றுடன் முடிவடைந்தது பஸ் சேவைகள் இன்று முதல் வழமைபோல் நடைபெறும்.

பொதுத்தேர்தலை முன்னிட்டு இவ்வேலைநிறுத்தம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கொழும்பிலிருந்து வடக்கே அனுப்பப்பட்ட ‘சப்பல்’ ரக பஸ்கள், இயக்கமுடியாத நிலையில் இருப்பதாக ஆட்சேபித்து கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவைச்சேர்ந்த பஸ் கண்டக்டர்களும், சாரதிகளுமாக 200க்கு அதிகமான ஊழியர்கள் திடீர்வேலைநிறுத்தத்தில் இறங்கினர்.

இதனைத் தொடர்ந்து, டிப்போ முகாமையாளருக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, நேற்றுமுன்தினம் யாழ்.அரசாங்க அதிபர் தலைமையில் சமரசமாநாடும் இடம்பெற்றது.

இம்மாநாட்டில், ஒருநாள் அவகாசம் தரும்படி யாழ். அரசாங்க அதிபர், வேலைநிறுத்தம் செய்யும் ஊழியர்களைக் கேட்டிருந்தார். இதற்கிணங்க இன்று திங்கட்கிழமை வரை அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

நிலைமை இவ்விதம் இருந்தபோதிலும், பொதுத்தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில் குறிப்பிட்ட பஸ் சேவையை நடத்தாவிருப்பது வாக்காளர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் என்றும் தேர்தல் முடிந்ததும் பஸ் ஊழியர்களின் கோரிக்கை கவனிக்கப்படுமென்றும் உறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை இ. போ. ச. பஸ் ஊழியர்களின் ஆறு நாள் வேலைநிறுத்தம் நேற்றுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

டிப்போவில் உள்ள ‘சப்பல்’ பஸ்களைத் தவிர்ந்த ஏனைய 34 ‘அசோக் லெயிலண்ட்’ பஸ்களை மட்டும் ஓட்டுமாறும் தேர்தல் முடிந்த பின்னர் புதிய பஸ்களை வரவழைத்து கொடுப்பதாகவும் பஸ்ஊழியர்களைக் கேட்டுக் கொண்ட

[8-ம் பக்கம் பார்க்க]

## ‘ஈழநாடு’ தேர்தல் போட்டி

பொதுத் தேர்தலுக்கு இன்னும் 3 நாட்களே இருக்கின்றன. ‘ஈழநாடு’ தேர்தல் போட்டி முடிவு திகதி 20-7-77 உங்கள் கூப்பன்களை அனுப்பி விட்டீர்களா? இன்றேல் உடன்அனுப்பி வையுங்கள்.

[விபரம் உள்பக்கத்தில்]

## அமைச்சர் ஆட்சேபம்

ஹைதராபாத் ஜூலை 17

தமது ஆட்சிக் காலத்தில் எதிர் தரப்பினரை பழிவாங்க முற்படவில்லை என்று முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறியிருப்பதை மத்திய அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆட்சேபித்துள்ளார்.

ஆந்திர மாநிலத்தில் உள்ள தெனாலியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அமைச்சர் மேலும் பேசுகையில் ‘‘திருமதி காந்தி சினேகலதா என்ற நடிகை உட்பட பலரை சிறை வைத்தது எதற்காக? அவர்கள் தம்மை எதிர்த்தார்கள் என்பதற்காகத்தானே’’ என்றார்.

## இப்படி நடப்பது தேர்தல் குற்றம்!

கொழும்பு, ஞாயிறு

‘‘வேறொருவருடைய வாக்காளர் அட்டையை வைத்திருப்பது தேர்தல் சட்ட விதிகளின் கீழ் குற்றமாகும்’’ என்று தேர்தல் ஆணையாளர் திரு. டயஸ் அபயசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:- வாக்காளர் தமது வாக்காளர் அட்டைகளை வாக்குச் சாவடிக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

வாக்காளர் அட்டைகளைத் தவறவிட்டவர்களும் வாக்களிக்கலாம். இவர்கள் தம்முடன் தமது அடையாள அட்டைகளை எடுத்துச்செல்லவேண்டும் அடையாள அட்டையின் உதவியுடன் இவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட கி. சேவகர்கள் வேலை நிறுத்த முஸ்தீபு!

யாழ்ப்பாணம், திங்கள்

கிராம சேவையாளர்களின் முக்கிய கோரிக்கைகளை அரசாங்கம் உடனடியாக வழங்காத பட்சத்தில் அகில இலங்கை ரீதியில் வேலை நிறுத்தம் செய்வதென்றும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வேலை நிறுத்த தேதியை அறிவிக்குமாறு இலங்கை கிராம சேவையாளர் பெடரேஷனைக் கோருவதென்றும் யாழ்ப்பாண மாவட்ட கிராமசேவையாளர் சங்க 14வது ஆண்டு பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இக்கூட்டம் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. கே. எஸ். சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

கிராம சேவை உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் யாவும் அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர்களின் சிபார்சுகளை அனுசரித்தே செய்யப்படவேண்டுமென ஒருவர் கொண்டுவந்த தீர்மானம் தோல்வியடைந்தது.

## இணுவிலில் இன்று சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம்,திங்கள் பூட்டப்பட்டுள்ளன.

இணுவில் சிவகாமி அம்மன் கோவில் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று மத்தியானம் நடைபெறவிருக்கிறது.

பல லட்சம் ரூபா செலவில் பொதுமக்களின் நிதிஉதவியில் இத்தேர் உருவாக்கப்பட்டுள்ளது சிற்பக்கலாமணி ஆ. ஜீவரத்தினம் தலைமையிலான திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தினரால் இத்தேர் கட்டப்பட்டது.

இத்தேரில் ஏழு குதிரைகள் இத்துடன் இவ்வாலய பிரகார மூர்த்தியான விநாயகப் பெருமானுக்காகப் புதிதாக அமைக்கப் பெற்றபுதிய தேரும் இன்று வெள்ளோட்டம் விடப்படும். இத்தேரும் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தினரால் உருவாக்கப்பெற்றது.

இவ்வாலய தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க் கிழமையும் தீர்த்தத்திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமையும் நடைபெறும். (அ)

## ஐ. தே. க. ஆட்சிக்கு வந்தால் எம்.பி.க்கள் மீதான ஊழல்கள் விசாரிக்கப்படும்

### ஜே. ஆர். உறுதி

பொல்காவலை, ஞாயிறு

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தால் கடந்த ஆட்சிக் காலத்தில் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட எம். பி. க்கள் மீது உடன் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் அத்துடன் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பொல்காவலையில் நடைபெற்ற கூட்டத்தில் கூறினார்.

ஐ. தே. க. சுதந்திரக்கட்சியைப் போலன்று. நேர்மையின்மை, ஊழல், தீயகுணங்கள் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்ட கட்சி. எக்காரணம் கொண்டும் நாம் ஜனநாயகத்திற்கு விரோதமாக ஆட்சிமன்றத்தின் ஆட்சிக்காலத்தை நீடிக்கமாட்டோம் என்றும் திரு. ஜெயவர்த்தன கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

‘‘ஐக்கியதேசியக்கட்சி இப்போது முற்றிலும் புதிதாக உருவாக்கப்பட்ட பொதுமக்களின் கட்சி இக்கட்சிக்கு இம்முறை 120 தொகுதிகளைத் தாருங்கள். எமது வாக்குறுதிகளை உரிய காலத்தில் நிறைவேற்றுகிறோம். நாம் எமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுதுவிட்டால் எங்களை வெளி

(8-ம் பக்கம் பார்க்க)

# ஈழநாடு

# தேர்தல் போட்டி 77

**யாழ்ப்பாணத்தில் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான சபைக்கு நிதி சேர்த்து உதவும் முகமாக 'ஈழநாடு' இப்போட்டியை நடத்துகின்றது.**

போட்டி நிபந்தனைகள்

1. 'ஈழநாடு' ஸ்தாபன இயக்குநர்கள், ஊழியர்கள் அவர்களின் குடும்பத்தினர் ஆகியவர்களைத் தவிர்ந்த ஏனைய அனைவரும் வயது வரம்பின்றி இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

2. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும் பிரவேசப்பத்திரங்களே போட்டியில் பயன்படுத்தப்படல் வேண்டும்.

3. போட்டிக்கான பிரவேசக் கட்டணம் ரூ. 1/- ஒன்றுக்கு மேற்பட்ட பிரவேசப்பத்திரம் ஒவ்வொன்றுக்கும் பிரவேசக்கட்டணம் ஒருரூபாய் வீதம் அனுப்பப்படல் வேண்டும். தபாற் கட்டளை அல்லது காசுக் கட்டளைகள்:-

வட இலங்கை புற்றுநோய்ச் சங்கம்,
யாழ்ப்பாணம்

என்ற பெயரில் எடுக்கப்பட்டு, பிரவேசப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் எக்காரணம் கொண்டும் பிரவேசக்கட்டணம் ரொக்கமாக அனுப்பப்படலாகாது.

4. நிரப்பப்பட்ட பிரவேசப் பத்திரங்கள்,

பொது முகாமையாளர்,
'ஈழநாடு'
த. பெ. 49
யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு, கடித உறையின் இடது மேற்கரையில் 'ஈழநாடு' தேர்தல் போட்டி 77 எனக் குறித்து 20-7-1977ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதத்தில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையில் இடதுபக்கம் கீழ்க்கரையில் அனுப்புபவரின் முகவரி தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

5. தேர்தல் நடைபெறுவதற்கு முன்பதாக ஒரு வேட்பாளர் காலமானால் அவர்போட்டியிடும் தொகுதி இப் போட்டியிலிருந்து நீக்கப்பட்டுவிடும்.

6. இப் போட்டியில் ஐந்து கேள்விகள் அடங்கும். அவைகளுக்குப் பின்வரும் புள்ளிகள் வழங்கப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கேள்வி | 1... | 25 பெயர்கள் 2 புள்ளிகள் வீதம் | 50 | புள்ளிகள் |
| ,, | 2...... | ...... | 06 | ,, |
| ,, | 3...... | ...... | 06 | ,, |
| ,, | 4...... | ...... | 08 | ,, |
| ,, | 5... | 15 பெயர்கள் 2 புள்ளிகள் வீதம் | 30 | புள்ளிகள் |
| | | மொத்தம் | 100 | ,, |

7. புள்ளிகளின் அடிப்படையிலேயே வெற்றிகள் நிர்ணயிக்கப்படும். முழுவதும் சரியான விடைகளுக்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். பிழையான விடைகள் அதற்குரிய புள்ளிகளை இழந்துவிடும்.

8. வெற்றி பெறுவோருக்கு பின்வரும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்:-

| | | |
|---|---|---|
| 1ம் பரிசு | ரூ. | 1000 |
| 2ம் ,, | ரூ. | 500 |
| 3ம் ,, | ரூ. | 250 |

மிகக் கூடுதலான புள்ளிகள் பெறும் போட்டியாளருக்கு முதல் பரிசு வழங்கப்படும். இரண்டாவது மூன்றாவதாக அதிக புள்ளிகளைப் பெறும் போட்டியாளர்களுக்கு அந்த ஒழுங்கின்படி பரிசுகள் வழங்கப்படும். மிகக் கூடுதலான புள்ளிகள் பெறும் போட்டியாளர்கள் ஒருவருக்கு மேற்படின்- இருவராயின் திருவுளச்சீட்டின்படி முதல் இரண்டு பரிசுகளும் தீர்மானிக்கப்படும்; இருவருக்கு மேற்படின் முதல் மூன்று பரிசுகளும் திருவுளச்சீட்டின்படி தீர்மானிக்கப்படும். இரண்டாம், மூன்றும் பரிசுகள் விஷயத்திலும் இதே முறை கையாளப் படும்.

9. போட்டி முடிவுகள் 21-8-1977 'ஈழநாடு' வாரமலரில் வெளியிடப்படும். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் ஏற்பாடுகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

10. இப்போட்டியில் ''ஈழநாடு தேர்தல் போட்டி 77 நடுவர்குழு'' வின் தீர்ப்பே இறுதியானதாகவும் சட்டப்படி கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும். இப் போட்டி முடிவுகள் தொடர்பாக போட்டியாளர்களுடனோ வேறு எவருடனுமோ எந்தக்காரணத்தின் நிமித்தமும் 'ஈழநாடு' எதுவித கடிதத் தொடர்புகளும் வைத்துக்கொள்ள மாட்டாது.

11. தெளிவின்றியும், இறுக்கியும், வெட்டியும் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் பிரவேசப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

"என் தொகுதி மக்களுக்கு

## பிரச்னைகள் வந்தபோது துணிவுடன் அணுகினேன்''

## —டாக்டர் ஏபிரகாம்

யாழ்ப்பாணம், திங்கள் ''சந்நியோகு மையோர் கோவிலில் பொலிஸார் நடத்திய அட்டூழியத்தின்போது அதனை எதிர்த்துத் துணிச்சலுடன் போராடி அடுத்த நாள் சுற்றுப்பிரகாரம் நடத்துவதற்கு நான் பட்டதை இப் பகுதி மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். இப்பகுதியில் ஒரு உதைபந்தாட்டப் போட்டியின்போது இடம்பெற்ற இராணுவத்தினர்- பொது மக்கள் மோதலின்போது நான் தலையிட்டதும் யாவரும் அறிந்ததே''



இவ்வாறு யாழ்ப்பாணம் தொகுதிச் சுயேச்சை வேட்பாளர் டாக்டர் ஏ.எல். ஏபிரகாம் தம்மை ஆதரித்து குருநகர் கலை அரங்கிற்கு அருகில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் டாக்டர் ஏபிரகாம் கூறினார். இக் கூட்டத்திற்கு திரு. வி. ஜே. கொன்ஸ்டன்டைன் தலைமைவகித்தார். டாக்டர் ஏபிரகாம் தொடர்ந்து பேசியதாவது:

''இப்பகுதியில் நடந்த ஒரு உதைபந்தாட்ட நிகழ்ச்சியின்போது இராணுவத்தினரும் எனது தொகுதி மக்களும் மோதிக் கொண்டார்கள். அடுத்தநாள் உதவிப்பொலிஸ் அதிபரும் பொலிஸ் அதிகாரிகளும் என்னிடம்வந்து இராணுவத்தினரைச் சமாளிக்க சாட்டுக்கு ஆயினும் இருவரைக் கைதுசெய்ய உதவும்படியும் அவர்களை ஒருநாள் விளக்கமறியலில் வைத்துத் துன்புறுத்தாமல் அனுப்பி வைப்பதாகவும் கேட்டபோது இருமணித்தியால அவகாசத்தை நான் கேட்டேன். பின்பு அவர்கள் வந்தபோது 'எனக்கு இருவர் அல்ல ஒருவர் தான் கிடைத்துள்ளார் அவரை வேண்டுமானால் அழைத்துப் போங்கள்' என்றேன். 'யாரை' என்று அவர்கள் கேட்டபோது, 'அது நான்தா' என்றேன். அவ்வ

(7-ம் பக்கம் பார்க்க)

## 'பிரிவினை தீங்கிழைக்கும்''

யாழ்ப்பாணம், திங்கள் ''பிரிவினை சிறுபான்மைத் தமிழருக்குத் தீங்கு செய்யும், தனிநாட்டில் நாம இப்போது உள்ளதுபோல ஆளப்படுபவர்களாக இருப்போமேயல்லால் ஆளுபவர்களாக இருக்கமாட்டோம். ஐக்கிய இலங்கையில் எமக்கு இருக்கின்ற உரிமை கூட பிரிக்கப்படும் ஈழத்தில் இருக்காது.''

இவ்வாறு யாழ்ப்பாணம் தொகுதி சுயேச்சை வேட்பாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு ஆதரவாக தேவரிக்குளத்திற்கு அருகாமையில் நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமைவகித்த திரு. கிட்ணர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், 'யாழ். நகரிலே சிறுபான்மைத் தமிழர்களாகிய நாம் சேரி வாழ்க்கை நடத்தும்படி போன்ற நிலையில் உள்ளோம். இந்த நிலையைத் தீர்த்து எங்கள் வருங்கால சந்ததியினருக்கு வாழ்வு கொடுக்க தனிநாட்டுக் கொள்கைக்காரர்களால் முடியாது என்றார்.

வட்டார முன்னாள் மாநகர உறுப்பினர் திருமதி பொன்மணி அந்தோனியா சுவாமிநாதர் பேசுகையில், ''உரிமைகளுக்கு முன்பு எங்களுக்குப் பொருளாதார நலன்கள் அவசியம். அப்போதுதான் கிடைக்கின்ற உரிமைகளையும் திரும்பப் பறிகொடுக்காமல் பாதுகாக்க முடியும்' என்றார்.

திரு. வி. எஸ். செல்வராஜா, திரு. எஸ். என். செல்வராஜா உட்படப் பலர் உரையாற்றினர். [கூ-இ]

## கேள்வி விளம்பரம்

**துணுக்காய் கிராமசபை**

1977-ம் ஆண்டு யூலைமாதம் 27-ந் திகதி புதன்கிழமை காலை 10 மணிவரையில் துணுக்காய் கிராமசபைத்தலைவரால் ஆலங்குளம் வீதி வேலைக்கு ரூபா 20,000/-க்கும் அதற்கு மேலும் பதிவுசெய்த கொந்தராத்துக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பப் பத்திரங்கள் 26-07-77-ந் திகதி நண்பகல் 12 மணிவரையும், கேள்விப் பணமாக ரூபா 200/-ம் கேள்விப் பத்திரப்பணமாக ரூபா 25/-ம் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏற்றுக்கொள்ளப்பட்டவிண்ணப்பகாரர் 2-8-77-ம் திகதி 12 மணிக்கு முன்னர் இதற்குரிய பிணைப்பணம் முழுவதையும் இக்காரியாலயத்தில் கட்டி 30-9-77-ம் திகதிக்குள் இவ் வேலையைப் பூர்த்தி செய்துதருவதற்கு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளல் வேண்டும்.

மேலும் விபரங்கள் தேவைப்படின் இக் காரியாலயத்தில் நேரில் அறியவும்.

வே. கந்தசாமி,
தலைவர்,
துணுக்காய்
கிராமாட்சி மன்றம்.

14-07-1977. 6662

## வரி விளம்பரம்

**பயிற்சி**

மத்திய கிழக்கு நாடுகளிலும் கப்பல்களிலும் வேலைகள் பெற ஏற்ற பயிற்சிகள், கல்வி அமைச்சினால் தொழிற்பயிற்சி நிலையமென அங்கீகாரம் பெற்ற இலங்கையின் ஒரே பயிற்சிநிலையம். NIBT, வெல்டிங் (Electric and Gas) இலெக்றிக் வயரிங், றேடியோ (Transistor) Motor Mechanism, City and Guilds (Electrical) P.M.G. (Special) Certificate பகல் - இரவு வகுப்புகள். National Institutes, மைத் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6610

உ

**ஏலவிற்பனவு**

மாங்குளம் கண்டி வீதியில் அடைவு பிடிக்க உத்தரவு பெற்ற க.வே. ஸ்ரீஸ்கந்தராசா ''இராஜவேல்ஸ்'' அவர்களிடம் 11-9-72 முதல் 31-3-76 வரை அடைவுவைத்து மீட்கப்படாத நகைகள் பூராவும் 3-8-77 காலை எட்டு மணி தொடக்கம் மேற்படி ஸ்தாபனத்தில் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

இப்படிக்கு
அ. இராதாகிருஷ்ணன்,
ஏலத்தார்.

மாங்குளம்.
18-7-77. 6678

## அறிவித்தல்

சுதுமலை அம்பாள் சனசமூக நிலையத்தின் நிதிக்காக 16-7-77-ம் திகதி இழுக்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச்சீட்டு சிலதவிர்க்க முடியாத காரணத்தால் 14-8-77-ம் திகதி சீட்டிழுக்கப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

இப்படிக்கு
6676 செயலாளர்

## விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி

**லங்கெம்**

சுமிசிடின் பூச்சிக்கொல்லி இப்பொழுது கிடைக்கிறது என்பதனை யாழ்ப்பாணத்திலுள்ள விவசாயிகளுக்கு மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறோம். மின்சார நிலைய வீதி, 219-ம் இலக்கத்திலுள்ள லங்கெம் கடை, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள விவசாய உற்பத்தி நிலையங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றில் உங்கள் தேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

லங்கெம் சிலோன் லிமிடெட்,
தபாற் பெட்டி எண்: 919
கொழும்பு.

# 'பதவி பெரிதல்ல, தொண்டனுக இருக்கவே விரும்புகிறேன்''

## தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். கூறுகிறுர்

சென்னை, ஜூலை. 17

கருணுநிதி போராட்டம் நடத்திஞல் அதை சந்திக்கத் தயார் என்று முதலமைச்சர் எம். ஜி. ஆர். அறிவித்தார்.

சென்னையில் நிகழ்ந்த ஒரு மாபெரும் கூட்டத்தில் தமிழ் நாடு முதலமைச்சர் எம். ஜி. ஆர்.கலந்துகொண்டுபேசிஞர்.

மேலும் எ ஜி. ஆர். பேசிய தாவது:

இன்றுதமிழகத்தில் மீண்டும் அண்ணுவின் ஆட்சி அமைந்திருக்கிறது. நான்இப்படிச்சொல்வதால் நான் அண்ணுவுக்குச் சமமானவன என்று பேசி விட்டதாக பழி சொல்லி செய்தி போடுவார்கள்.

1971-ம் ஆண்டுக்குப் பிறகு கழகஆட்சிஎன்பது மாறி கலைஞர் ஆட்சி என்றுசொல்லுகிற அளவுக்கு நிலைமைகள்மாறின; மாற்றப்பட்டன.

கலைஞர் கருணுநிதி 7 ஆண்டு காலம்முதலமைச்சராகஇருந்து ஆட்சி நடத்திஞர். பலசாதனைகள் செய்துவிட்டதாக புள்ளி விவரங்கள் தருகிருர். பல கிராமங்களில் குடிநீர்இல்லை.கிராம மக்கள் மாடமாளிகைகளைக் கேட்கவில்லை. பெரிய தொழிற் சாலைகளைக் கேட்கவில்லை. குடிநீர்தான் கேட்கிருர்கள்.

### கலைஞர் சவால்

கலைஞர் கருணுநிதி '10 நாட்கள் இந்த ஆட்சி இருக்குமா, பார்ப்போம்' என்கிருர்.

பரிதாபப்படவேண்டியநிலை. நான் அவருக்காக அனுதாபப் படுகிறேன்.

எங்களை அவ்வளவு ஏமாளிகளாக நினைக்கவேண்டாம்.

### 6 மாதக்கெடு

நமக்கு 6 மாதகாலம் தவணை கொடுத்திருக்கிருராம். நீங்கள் 7 ஆண்டுகாலம் ஆட்சி செய்தீர்களே, அதில் எவ்வளவு குறைபாடுகள்? எத்தனை பொய் வழக்குகள் போட்டீர்கள்? எல்லாம் மக்களுக்குத் தெரியத் தான் போகிறது.

நீங்கள் 7 ஆண்டுகாலஆட்சியில் என்ன செய்தீர்கள்? நாங்கள் 6 மாதகாலத்தில் எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றி விடுவோமென்று வாக்குக் கொடுத்தோமா?

ஒரு அரசாங்கம் தாங்கள்பதவியில் இருக்கும் 5 ஆண்டுகளுக்குள்ளாகத்தான் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும்.

### போராட்டமா?

மக்களுக்குக் கொடுத்த வாக்குறுகளை 6 மாத காலத்தில் நிறைவேற்றுவிட்டால் போராட்டம் நடத்துவாராம். அவரிடம் இருக்கும் சில அப்பாவிகளை ஜெயிலுக்கு அனுப்ப ஆசைப்படுகிருர்.

நீங்கள் எப்படிப் போராட்டம் நடத்துவீர்கள் என்பது எனக்குத்தெரியும். இதை எப்படிச் சமாளிப்பது என்பதும் எனக்குத்தெரியும்.

நேர்மையாக சட்டத்தின் துணைகொண்டு அதை சரிசெய்யவும் எனக்குத்தெரியும்.

### பதவி பெரிதல்ல

எனக்குப் பதவி பெரிதல்ல. நான் எப்போதும் தொண்டனுக இருக்கவேவிரும்புகிறேன். பதவியைத்தூக்கிஎறிந்துவிட்டு போராடவும் நான் தயாராக இருக்கிறேன். (உ)

## சர்க்காரியா கமிஷன் அறிக்கை அக்டோபரில் வெளியாகும்

சென்னை, ஜூலை 17

சர்க்காரியா கமிஷன் அறிக்கை அக்டோபர் மாதம் மத்திய அரசிடம் ஒப்படைக்கப் படும். இத்தகவலை நேற்று நீதிபதி சர்க்காரியா சென்னையில் நிருபர்களிடம் வெளியிட்டார்.

முன்னுள் தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணுநிதி உட்பட அவரது சக அமைச்சர்கள் சிலர்மீதான லஞ்ச ஊழல், அதிகார துஷ்பிரயோகம் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட சர்க்காரியா கமிஷன் சென்னையில் விசாரணையை நேற்று முடித்துக்கொண்டது.

### முரசொலிமாறன் கோரிக்கை

இதுபற்றி நீதிபதி சர்க்காரியா நிருபர்களிடம் மேலும் தெரிவித்ததாவது; இக்கமிஷன் அறிக்கையை அக்டோபர் மாதத்தில் மத்திய அரசிடம் சமர்ப்பிப்பதென ஏற்கனவே முடிவுசெய்திருந்தேன்,

வீராணம் திட்டம் குறித்து சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்று திரு, முரசொலிமாறன் கோரியுள்ளதால் புதிய சூழ்நிலை உருவாகியது. அக்டோபர் முதல் வாரத்தில் கமிஷன் அறிக்கை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுவிடும்.

கமிஷன் புதுடில்லியில்அடுத்த மாதம் 6-ம் திகதி மீண்டும் கூடும். (உ)

## "இராணுவ வல்லரசுகளுடன் சேர இந்தியா தயாரில்லை'

### வெளியுறவு அமைச்சர் அறிவிப்பு

காட்மண்ட், ஜூலை 17

''அணிசேராக் கொள்கைக்கு எதிராக செயல்படும் எந்த இராணுவ வல்லரசுடனும் சேர்ந்துகொள்வதற்கு பாரதம் தயாராக இல்லை.'' என்று பாரத வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பே காட்மண்டில் நிருபர்கள் மத்தியில பேசுகையில் அறிவித்தார்.

தற்போது நேபாளத்துக்கு விஜயம் செய்துள்ள அவர் மேலும் தெரிவித்ததாவது ''தெற்காசியா சமாதானப் பிராந்தியமாக பிரகடனப் படுத்தப்பட வேண்டும். ஆசிய கூட்டுப் பாதுகாப்புத் திட்டம் குறித்தும் கவனம் செலுத்தப்படும்.'' (உ)

## திருட்டுப்போன சைக்கிள்மீட்பு

உடுப்பிட்டி, ஞாயிறு,

நெல்லியடிச் சந்தையில் திருட்டுப்போன சைக்கிள் மந்திகையில் உள்ள தோட்டம் ஒன்றில் மீட்கப்பட்டது.

கரணவாய் தெற்கைச் சேர்ந்த ஒருவரின் சைக்கிளே களவாடப்பட்டது. பிரஸ்தாப நபர் நெல்லியடிச் சந்தைக்குச் சென்று திரும்பியபோது தமது சைக்கிளைக் காணுது அதிர்ச்சியடைந்தார். பின்னர் இச் சைக்கிள் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியின் பின் பக்கத்திலுள்ள தோட்டம் ஒன்றில் அநாதரவான நிலையில் தேடுவாரற்றுக் கிடப்பதாக முறையிட்டதைத் தொடர்ந்து துன்னுலை தெற்குக் கிராம சேவகர் திரு. செ. அ. ஞானச்சந்திரன் சைக்கிளை மூட்டார். (அ)

## ராஜ்யசபைக்கு மாறன், மூப்பனுர் உட்பட எழுவர் போட்டி!

சென்னை, ஜூலை 17

தமிழ்நாடு சட்டசபையில் இருந்து ராஜ்ய சபை உறுப்பினர் பதவிக்கு ஏழுபேர் போட்டியிடுகின்றனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும் இத் தேர்தலில் ராஜ்ய சபையில் ஆறு உறுப்பினர்கள் தமிழ் நாடு சட்டசபையில் இருந்து தெரிவு செய்யப்படவேண்டும்.

வேட்பு மனு வாபஸ் பெறும் கடைசித் திகதி நேற்றுடன் முடிவடைந்தது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கருப்பையா மூப்பனுர், கம்யூனிஸ்ட் தலைவர் திரு. பி. இராமமூர்த்தி, ஜனதா கட்சியைச் சேர்ந்த திரு. அப்பாராவ் திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த திரு. முரசொலிமாறன் அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த திருமதி நூர்ஜஹான் ஜனுர்த்தனம் உட்பட மூவர் ஆகியோர் இததேர்தலில் போட்டியிடுகின்றனர்.

ஜனதா கட்சியைச் சேர்ந்த டாக்டர் சந்தோஷமும் மற்றும் சிலரும் போட்டியில் இருந்து வாபஸ் பெற்றுக் கொண்டனர்

இம்மாதம் 23-ம் திகதி சனிக்கிழமை இத்தேர்தல் நடைபெறும்.

### புதுச்சேரியில்

புதுச்சேரி யூனியன் பிரதேசசட்டசபையில் இருந்துஒருவர் ராஜ்ய சபைக்குத் தெரிவு செய்யப்படவேண்டும். இப் பதவிக்கு மூவர் போட்டியிடுகின்றனர்.

பொன்னுச்சாமி, ராஜாராம், யோசெப் ஆகியோரே இம்மூவருமாவர். (உ)

## கார்ட்டர் அனுமதி

வாஷிங்டன், ஜூலை 17

மேலும் 15000 இந்தோசீன அகதிகளை அமெரிக்காவுக்குள் அனுமதிக்க ஜனுதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர்அனுமதி வழங்கியுள்ளார்.

லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இவர்கள். (உ)

## 62வயதுடன் ஓய்வு

லண்டன், ஜூலை 17

பிரிட்டனில் இவ்வருடம் 67 ஆயிரம் சுரங்கத் தொழிலாளர் ஓய்வு பெறுவர்.

பிரிட்டன் சுரங்கத்தொழிலாளர் 62 வயதுடன் ஓய்வு பெறுவதற்கு பிரிட்டிஷ் பிரதமர் திரு. கலகன் இணக்கம் தெரிவித்துள்ளதை அடுத்தே இவர்கள் ஓய்வு பெற உள்ளனர். (இ)



உ

இணுவில்

சிவகாமி அம்மன்

கோவில்

அருட்திரு அன்னை சிவகாமிக்கு

பொதுமக்களால் பல இலட்ச ரூபாய் செலவில்

உருவாக்கப்பட்ட

ஈழத்தில் மிகப்பெரிய

சித்திரத் தேர்

வெள்ளோட்ட

விழா

இன்று

ஆடி 3-ம் திகதி (18-7-77)

திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு

நடைபெறும்

உருவாக்கம்:

திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயம்

ஸ்தபதி:

சிற்பக்கலாமணி ஆ. ஜீவரட்ணம்

உதவி ஸ்தபதிகள்:

ஜீவரட்ணம் சகோதரர்களும்

உறவினர்களும்.

தேர்த் திருவிழா

ஆடி 4 (19-7-77) செவ்வாய்க்கிழமை.

தீர்த்தத் திருவிழா

ஆடி 5 (20-7-77) புதன்கிழமை.

— தேர்த் திருப்பணிச் சபை

6679

**மணிவாக்கு**

முழுமையான அகிம்சைக்கண் பகைமை சற்றும் தோன்றுவதில்லை. —காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

# இந்நாட்டு மன்னர்கள்!

பொதுத் தேர்தலுக்கு இன்னும் இரண்டுதினங்கள் தான் இருக்கின்றன.

இந்நாட்டு மன்னர்களான வாக்காளப்பெருமக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்குத் தங்கள் பொன்னான வாக்குகளை இரண்டு தினங்களின் பின் அளிக்கப்போகிறார்கள்.

ஏழு வருடங்களின் பின் இந்தச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. வாக்களிப்பு என்பது தேர்தல் தினத்துடன் முடிந்துவிடும். ஒரு தடவை புள்ளடியிட்டு வாக்குப் பெட்டிக்குள் போட்டுவிட்டால் பின்னர் அதை எடுத்து அழித்துத் திருத்தி மீண்டும் அளிக்கமுடியாது.

வாக்களிக்கும் வேலை ஒரு நாளில்முடிந்துவிடும ஆனல் அன்று அளிக்கப்படும்வாக்கு, வாக்களிப்பவரினதும் அவரது பிள்ளைகளினதும் அவரது சமுதாயத்தினதும் நாட்டினதும் எதிர்காலத்தை நிர்ணயிப்பதாகும்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவரும் தாம் வெற்றி பெறுவது நிச்சயம் என்ற நம்பிக்கையுடன்தான் போட்டியிடுகிறார்கள். வெற்றிபெறுவதற்காக அவர்கள் என்னென்ன செய்ய வேண்டுமோ எந்தெந்த முயற்சிகளை எடுக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்துவருகின்றார்கள். அவர்கள் அப்படித்தான் செய்வார்கள்; செய்யவும் வேண்டும்.

கட்சிகள் ஒவ்வொன்றும் புதிதுபுதிதாக வாக்குறுதிகளை அளித்துவருகின்றன.

பிரசாரக் கூட்டங்களிலும் பிரசாரங்களிலும், வாக்கு வேட்டையிலும் வேட்பாளர்களும், கட்சிகளும் புதிய புதிய உத்திகளையும் தந்திரங்களையும் கையாள்கின்றனர். தேர்தல் என்றால் தந்திரமில்லாமலிருக்க முடியுமா?

பிரசாரக் கூட்டங்களில் ஒரே மேடையில் பேசுபவர்களே முன்னுக்குப்பின் முரணைகப் பேசுபவர்களையும், மேடைக்குமேடை முரணைகப் பேசுபவர்களையும், திருப்பித்திருப்பி ஒரேபொய்யைச் சொல்லி அதை மெய்யாக்க முனைபவர்களையும் தேர்தல் பிரசார மேடைகளில் சந்திக்கலாம்.

கடந்த ஒருமாதத்துக்கு மேலாக இந்நாட்டு மன்னர்கள் இந்தப் பிரசாரங்களையெல்லாம் கண்டும், கேட்டும், படித்தும் அறிந்துள்ளனர்.

இனிஇரண்டு தினங்களில் அவர்கள் ஆற அமரச் சிந்தித்து தங்கள் பொன்னான வாக்குகளை உபயோகிக்க வேண்டும்.

நாடு அரசியல் சுதந்திரம் பெற்று ஏறத்தாழ முப்பதாண்டுகளாகின்றன. இந்தக்காலகட்டத்துக்குள்நிகழ்ந்தஆட்சிமாற்றங்கள்; அரசியல் நிகழ்ச்சிகள், சட்டதிட்டங்கள் யாவும் வாக்களிக்கச் செல்வதற்கு முன்னர் அசைபோட்டுப் பார்க்க வேண்டியவை.

அடுத்து கடந்த ஏழாண்டு காலத்தில் நாட்டில் நடைபெற்ற சம்பவங்கள், சட்டதிட்டங்கள், அரசியல்நிகழ்ச்சிகள்,அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் அனைத்தும் வாக்களிப்பதற்கு முன்னர் நன்கு சிந்திக்க வேண்டியவை.

ஏழாண்டுகளுக்குமுன் அரசியல் கட்சிகள் கொடுத்த வாக்குறுதிகள், அந்தத் தேர்தலில் ஒருகட்சியில் நின்று வாக்குறுதி கொடுத்தவர்கள் இன்று வேறுகட்சியில் நின்று கொடுக்கும் வாக்குறுதிகள் சென்ற தேர்தலில் வாக்குறுதியளித்துப் பார்த்தும் வாக்குக் கிடைக்காததால் தொகுதி விட்டுச் சென்றவர்கள், இன்று மீண்டும் தேர்தலில் வாக்குப் பெறுவதற்காக வந்து வாக்குறுதி கொடுப்பவர்கள், இவையெல்லாம் வாக்காளர் நன்கு அலசி ஆராய்ந்து பார்க்க வேண்டியவை.

மக்களின் எதிர்காலத்தையும் நாட்டின் அமைதியையும் அபிவிருத்தியையும் கருத்திற்கொண்டு இந்நாட்டு மன்னர்கள் தமது பொன்னான வாக்குகளைப் பயன்படுத்துவார்களென்றேஎதிர்பார்ப்போம்.

# "கல்வியுடன் விளையாட்டிலும் மாணவர் ஈடுபடவேண்டும்"

அரியாலை, ஞாயிறு

முன்னைய காலங்களில் மாணவர்கள் கல்வியிலும் பார்க்க விளையாட்டுகளிலேயே மிகவும் ஊக்கம்காட்டினர். ஆனல் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள கல்வி மாற்றங்களினல் பெற்றோர் தமது பிள்ளைகள் விளையாட்டுகளிலும் பார்க்க கல்வியிலேயே அதிககவனஞ்செலுத்தவேண்டுமென்றுவிரும்புகிறார்கள். விளையாட்டின் மூலம் நல்ல பழக்கங்களைக் கற்றுக்கொள்ளவாய்ப்பு ஏற்படுகிறது. மாணவர்கள் படிப்பதில் காட்டும் ஊக்கம் போல விளையாட்டுத்துறையிலும் போதிய ஊக்கம் காட்டி தமது உடலைப் பேணிப்பாதுகாத்துக்கொள்ளவேண்டும். பிள்ளைகள் சிறந்த குணங்கள் கொண்டவர்களாக வாழவேண்டுமானல் படிப்பிலும் விளையாட்டிலும் போதிய திறமை காட்டவேண்டும்.

இவ்வாறு வைத்திய நிபுணர் கே. துரைரத்தினம் பரியோவான் கல்லூரி ஆரம்ப பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டியின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றோருக்கு திருமதி துரைரத்தினம் பரிசில்கள்வழங்கினர்.

போட்டிகளில் சமனனபுள்ளிகளைப்பெற்ற பாஜிற்றர் இல்லமும், தொம்சன்இல்லமும் கூட்டுச் சம்பியன்களாயின 8 வயதுப் பிரிவில் செல்வன் அன்ரன் ஜெயசிங்கம், 9வயதுப் பிரிவில் செல்வன் ஜி. ரவிராஜன், 10 வயதுப் பிரிவில் செல்வன் ஏ. வாகீசன், 11 வயதுப் பிரிவில் செல்வன்கள் ஏ. சுமந்திரன், ஈ. எம். தேவா ஆகியோர் அதிகபுள்ளிகளைப் பெற்றுச் சம்பியன் கிண்ணங்களைச் சுவீகரித்துக்கொண்டனர்.

மைதான விளையாட்டுகளில் ... புள்ளிகளைப்பெற்ற செல்வன் ஜி. எஸ். கனகராசா சிறந்த விளையாட்டு வீரனுக்குரிய கிண்ணத்தைப்பெற்றுக் கொண்டார்.

அணிநடைப் போட்டியில் பாஜிற்றர் இல்லமும், பெட்லி அஞ்சல் ஓட்டத்தில் தொம்சன் இல்லமும் சம்பியன் கிண்ணங்களைச்சுவீகரித்துக்கொண்டன.

# "தமிழ் இயல் ஆராய்ச்சிக்கு பங்களிப்புச் செய்தவர்"

## விபுலானந்தருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழியல் ஆராய்ச்சி துறைக்கு பல வழிகளில் பங்கெடுப்புச் செய்த விபுலானந்த அடிகளாரின் திருவுருவப் படத்தை வளாக நூலகத்தில் திரைநீக்கஞ் செய்து வைப்பது நமக்கு பெருமை அளிக்கும் விஷயமாக மாத்திரமல்ல நமது கடமையுமாகும்.

இவ்வாறு யாழ். வளாகத்தின் நூலக தென்னசியவியல் அறையில் விபுலாந்த அடிகளாரின் உருவப்படத்தை திறந்துவைத்த வளாகத் தலைவர் திரு.க.கைலாசபதி பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலும் இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் முதல்தமிழ்ப் பேராசிரியராக வீற்றிருந்த அடிகளார் தமக்கென வாழாமல் பிறருக்கென வாழ்ந்தார். துறவியாய் இருந்து தூய தொண்டாற்றினர். அவரது கல்வி முயற்சிகளும் சேவைப் பற்றும் மாணக்கருக்கு என்றென்றும் முன்மாதிரியாய் அமைதல் வேண்டும் என்றார்.

கலாநிதி அ. சண்முகதாஸ் பேசுகையில் விபுலானந்த அடிகளார் மட்டக்களப்பில் நிறுவிய சிவானந்தா வித்தியாலயத்தில் கல்வி பயின்றவன் என்ற முறையிலும், அடிகளாரின் நூல்களை அபிமானத்துடன் கற்றவன் என்றமுறையிலும் நமது நாட்டின் கல்வி பாரம்பரியத்தின் அடிகளாரின் பங்கு எத்தகையது என்பதை நன்குணர்வேன். அவரது தீர்க்க தரிசனம் மகத்தானது. தேசிய ஒற்றுமை வளர்ச்சிக்கு வழிகாட்டியவர்களாக விளங்கினர் என்றார்.

அடிகளாரின் திருவுருவப் படத்தை அன்பளிப்புச்செய்த திரு.ச. அம்பிகைபாகன், திரு. து.சீனிவாசகம், திரு.வி.வைரமுத்து ஆகியோர் சார்பில் உரையாற்றிய திரு. அம்பிகைபாகன் பேசுகையில், "ஆறுமுக நாவலருக்கு சமனக வைத்து எண்ணத்தக்கவர். விபுலானந்தஅடிகளார். யாழ்ப்பாணத்திற்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்பதை 50 ஆண்டுகளுக்குமுன்பே எடுத்து வற்புறுத்தினர். அவரது நினைவை யாழ். வளாகம் போற்றவேண்டும் என்றார்.

பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் உத்தியோகஸ்தர்கள், மற்றும் வெளியே இருக்கும் கல்விமான்கள் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் விபுலானந்த அடிகளாரின் நூல்களும் அவர் வாழ்நாளில் பெற்ற விருதுகளும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது. (கு)

வழக்கு விவகாரம்:

# குமாரின் கூற்றுக்கு சந்திரகாசன் பதில்

யாழ்ப்பாணம், திங்

நான் நீதிமன்றத்தால் குற்றவாளியாக காணப்பட்ட காரணத்தால்தான் நான் தேர்தலில் போட்டியிடவில்லை என திரு. குமார் பொன்னம்பலம் கூறியதாக 'ஈழநாடு' பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்தது. இது தொடர்பாக நான் மானநஷ்ட வழக்குத்தாக்கல் செய்யப்போவதாக கூறியதை அடுத்து திரு. குமார் பொன்னம்பலம் சமீபத்தில் மீளவும் வேறுவிதமாக பேசியுள்ளார். இதுவும் 'ஈழநாடு' பத்திரிகையில் சமீபத்தில் வெளிவந்துள்ளது.

அதில் மன்னரில் இருவருக்கிடையில் நிகழ்ந்த வழக்குத் தீர்ப்பில் என்னைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளதாக கூறியுள்ளார். இது ஒரு சிவில்வழக்கு வழக்குகளில் நீதிபதிகளுக்கும் சட்டத்தரணிகளுக்கும் இடையில் சில பிரச்னைகள் எழுந்தால் வழக்குத் தீர்ப்பில் சட்டத்தரணிகள் பற்றிகுறிப்பிடப்படுதல் வழமை

பிரபல்யமான வழக்கறிஞர்களின் வழக்குகளில்கூட பலதடவைகளில் இப்படிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனல் ஒருவா தேர்தலில் போட்டியிடாது இருப்பதற்கு அவர் 2 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடிய ஒரு குற்றத்தின் பேரால் குறைந்தது ஆறுமாதம் என்கிலும் சிறைத்தண்டனை பெற்றிருதல் வேண்டும். அப்படியான குற்றங்கள் எதையும் நான் செய்யவுமில்லை நீதிமன்றத்தால் தண்டிக்கப்படவுமில்லை.

அப்படியிருக்க திரு. குமார் பொன்னம்பலம் சட்டத்தை அறிந்த சட்டத்தரணியாக இருந்தும் என்மேல் வேண்டுமென்றே அவதூறு கூறுவதற்காக இப்படியான கதைகளைக் கூறுகின்றார்.

அவருடைய பேச்சுக்கள் இடம் பெற்றுள்ள இரண்டு 'ஈழநாடு' பத்திரிகைகளைப் படித்தவர்களுக்கு அவர் முன்னுக்குப்பின் முரணைகப் பேசுவது நன்கு தெளிவாகும். இப்படிப்பட்ட பேச்சுக்களால் இனியும் அவர் யாழ்ப்பாணத் தொகுதிமக்களை ஏமாற்றமுடியாது"

இவ்வாறு திரு. சந்திரகாசன் யாழ்ப்பாணத் தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணி அபேட்சகர் சட்டத்தணி வெற்றிவேலு யோகேஸ்வரனை ஆதரித்து குருநகர் வாசிகசாலைக்கு எதிரிலுள்ளகலையரங்கு மைதானத்தில்சட்டமாணவன் திரு. அலோசியஸ் தலைமையில் நிகழ்ந்த தோதல் பிரசாரக் கூடடத்தில் பேசுகையில் கூறினர்.

### தந்தையின் பெயரால்

அவர் மேலும் பேசுகையில் "நான் எந்தந்தையின் பெயரால் எனக்கு வாக்களிக்கும்படி மக்கள் முன் செல்ல மாட்டேன். என் தந்தையின் புகழ் அவர் செய்த புண்ணியங்களுக்கே. நான் செய்யும் நன்மை தீமைக்கேற்ப எனக்கு பேறுகள் கிடைக்கட்டும்" என்றார்.

### தமிழரின் இறைமை

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபரும் காங்கேசன்துறை வேட்பாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் "ஆட்சியை மாற்றும் பொறுப்பு மக்களுடையது. எனவே இறைமை மக்களுடையதே. 1970 ம் ஆண்டில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி குடியரசு அரசியலமைப்பு ஒன்றை உருவாக்க தமக்கு அனுமதியளிக்கும்படி கோரி சிங்கள மக்கள்முன் சென்றனர். அவர்களும் அதனைக் கொடுத்தார்கள் இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ் மக்கள் முன் சுதந்திர தன்னதிக்க சமதர்ம தமிழ்ழக் குடியரசு ஒன்றை அமைக்க தங்களை அனுமதிக்கும்படி கோரி சர்வசன வாக்கெடுப்பை நடாத்துகின்றனர். இதில்தமிழ் மக்கள் தங்கள்இறைமையைச்சரியான முறையில் பயன்படுத்தவேண்டும். திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் உட்பட 24 தொகுதிகளிலும் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் த. வி. கூ. அபேட்சகர்களை வெற்றி பெறச்செய்வது மூலமே தமிழ் மக்கள் தமது இறைமையைச் சரிவரப் பயன்படுத்த முடியும்" என்றார்.

### அங்கேயார் ஆண்டாலென்ன

திரு. ஈழவேந்தன் பேசுகையில் "சிங்கள சிறிலங்காவை ஸ்ரீமாவோ ஆண்டாலென்ன ஜெயவர்த்தன ஆண்டாலென்ன எமக்கு அக்கறையில்லை. எங்கள் தமிழ்ஈழத்தை தமிழன் ஆளக்கூடிய முறையில் சர்வசன வாக்கெடுப்பில் த.வி. கூட்டணியை வெற்றி பெறச் செய்வதே தமிழ் மக்களின் கடமை" என்றார். (கி)

# பண்ணிசைக் கச்சேரி

அநுராதபுரம், சனி

அனுராதபுரம் புதிய நகர் ஸ்ரீ வரதராஜப் பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவத்தில் நல்லை. ஞானசபந்தர் ஆதீன பண்ணிசைப் புலவர் திரு. எஸ். ஆர். திருஞானசம்பந்தன பண்ணிசைக் கச்சேரி செய்தார். (ஈ)

# விவசாய விருத்திக்கு புதியவழி

வேலணை, ஞாயிறு

புங்குடுதீவில் விவசாயச் செய்கையை அதிக அளவில் விருத்தி செய்யும் நோக்குடன் அவ்வப்பகுதிகளில், தொடர்புகள் கமக்காரர்களை தீவுப்பகுதி விவசாயப் போதனசிரியர் திரு.க.சிவக்கொழுந்து நியமித்திருக்கின்றார். அவர்கள் மூலம் விவசாயிகள் தங்கள் தங்களுக்குத் தேவையான விவசாயப் பொருட்களையும், கிருமிநாசினிகள், விதைவகைகள், உரவகைகள் முதலியனவற்றையும் பதிவு செய்து கொண்டு பெற்றுக் கொள்ளலாமென்றும், காலம் தாழ்த்திப்பதிவு செய்து கொண்டால் அவர்கள் விரும்பிய பயிர்வகைகளை உரியகாலத்தில் செய்ய முடியாது போய் விடுமதலால் உரிய காலத்தில் விவசாயிகள் அனைவரையும் தொடர்புகள் கமக்காரர் மூலம் பதிவு கொள்ளுமாறும் சகல விவசாயிகளும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர். (அ)

யாழ்ப்பாணம், திங்கள்

ஜப்பானிய கல்வி மன்றத்தின் புலமைப் பரிசில் பெற்று ஓராண்டு காலம் டோக்கியோ பல்கலைக் கழகத்தில் தென் ஆசியவியல் வளாகம் பற்றிய ஆய்வுகளை நடாத்திய யாழ் வளாக மனித பண்பியல் பீடத் தலைவர் கலாநிதி கா இந்திரபாலா இலங்கை திரும்பினர்.

# தமிழ் ஈழத்தில் சாதி பேதம் களைந்தெறியப்படும்

## தெல்லிப்பழையில் அமிர்



தெல்லிப்பழை, ஞாயிறு

''நாம் எல்லோரும் ஒன்றுபட்டு உழைப்பதன் மூலமும், எமக்கென்று சுதந்திர ஈழம் அமைப்பதின் மூலமுமே எமது பிரச்னைகளைத் தீர்க்கமுடியும். நாம் அமைக்கும் தமிழ ஈழ அரசில் சாதி பேதம் வேரோடு களைந்தெறியப்படும்''

காங்கேசன்துறை தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. அ அமிர்தலிங்கம், சூடுவந்தான், கட்டுவன் மேற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களால் தமக்களிக்கப்பட்ட பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலைக் கருகாமையில் திரு.க. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும்பேசுகையில் கூறியதாவது:

''காங்கேசன்துறையில் நடைபெற்ற இடைத்தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சிசார்பாகப்போட்டியிட்ட திரு. வ. பொன்னம்பலம் இம்முறை, நடைபெறும் பொதுத்தேர்தலில் என்னை எதிர்த்துப்போட்டியிடாது எமக்கு ஆதரவாகவும் நின்று பாடுபடுகிறார். அதுமட்டுமல்ல வடஇலங்கையில் இயங்கும் மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சி இலங்கையிலே வாழும் தமிழ்இனம்தனித்தேசியஇனம் என்றும், அது பிரிந்துசெல்ல வேண்டி ஏற்படின் பிரிந்து செல்லவும் உரிமை இருக்கிறதென்றும் தீர்மானம் நிறைவேற்றி தலைமைப்பீடத்துக்கு அறிவித்ததுடன், வடபகுதியில் கூட்டணிவேட்பாளர்களுக்கெதிராக கம்யூனிஸ்ட் வேட்பாளர்களை நிறுத்தாமலும் விட்டுள்ளது. அத்துடன், கூட்டணியின் வெற்றிக்காகவும் அது உழைக்கிறது.

''நாம் எல்லோரும் ஒற்றுமையுடன், சாதி மத பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை உள்ளடக்கிய தமிழ் ஈழம் ஒன்றை அமைக்க, தமிழர் விடுதலைக் கூட்டணியின் கீழ் ஒன்றுபடுவோம்''.

மற்றும் த.வி.கூ.வேட்பாளர் திரு.தா. திருநாவுக்கரசு, திருவாளர்கள் மு.ஆலாலசுந்தரம், மாவை.சேனாதிராசா, த.மகாசிவம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்பட பலர் உரையாற்றினர்.

(கா-ஈ)

## ''குமாரன்ரத்தினம் வழியில் செல்லச்சாமி சேவையாற்றுவார்''

கொழும்பு, ஞாயிறு

''1947ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கொழும்பு மத்திய தொகுதி மூன்று அங்கத்தவர் தொகுதியாக இருப்பதற்குரிய காரணம் மூன்று சாகியத்தார்களும் இதன்பிரதிநிதிகளாகஇருக்கவேண்டுமென்பதற்காகவே. ஆனல் ஒற்றுமையையும், நேசமனப்பான்மையையும் தேசிய ஐக்கியத்தையும் தமிழர்கள் விரும்பிய காரணத்தினால் வேறு சாகியத்தைச் சேர்ந்தவர்களுக்கே தமிழர்கள் இதுவரையும் வாக்களித்துவந்தனர். ஆனல் எமது வாக்கைப்பெற்றவர்கள் எமது இனமக்களின் நலனுக்காகத் தமது சுண்டுவிரலைக்கூட அசைக்காத காரணத்தினால் இனிமேலும் பிறருக்கு வாக்குப்போடுவதில் எதுவித அர்த்தமுமில்லை என்றநிலைக்கு தமிழ் மக்கள்வந்துவிட்டனர். எனவேதான் இதுவரை விட்டுக்கொடுத்திருந்த ஸ்தானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக திரு. செல்லச்சாமி இங்கே போட்டியிடுகின்றார்''

கொழும்பு மத்திய தொகுதி வேட்பாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமியை ஆதரித்து கொம்பனித் தெருவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

டாக்டர் திருமதி ஆ. ஜே. உதுமான்லெப்பை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

'தமிழ்மக்கள் என்றுமே இன மத பேதமின்றிச் சேவையாற்றுவதில் பேர்பெற்றவர்கள். கொழும்பு மாநகரின் தலைவர்களாகவிருந்த சேர் இரத்தின சோதி சரவணமுத்து, குமாரன் இரத்தினம், உருத்திரா போன்றவர்கள் ஆற்றிய பாரபட்சமற்ற சேவையை இந்தநாடே அறியும். அதேபோன்று திரு. செல்லச்சாமியும் கடமையாற்றுவார் என்பதில் ஐயமில்லை. முஸ்லிம் மக்களின் வாழ்வுக்காகவும் வளத்துக்காகவும் தொண்டைமானவும் அவரது இயக்கமும் முப்பதாண்டு காலத்துக்கு மேலாக உழைத்ததை எவரும் மறுக்கமுடியாது'' என்று திரு. மகேந்திரன் பேசுகையில் குறிப்பிட்டார்.

வேறுபலரும் பேசினர்.

(அ)

## 'புத்தளம்முதல்பொத்துவில் வரையிலானது 'தமிழ்ஈழம்'

யாழ்ப்பாணம், திங்கள்

''தமிழ் ஈழம் மலை நாட்டிலா, கிழக்கிலா, வடக்கிலா அமையப்போகிறது என சிலர் கேலி செய்கிருர்கள். புத்தளம் முதல் பொத்துவில் வரை 1815-ம் ஆண்டுக்குமுன் இருந்த தமிழ் இராச்சியம் எவ்வாறு இருந்ததோ அதே போன்று தமிழ் ஈழம் அமைக்கப்படும் ஆகவேதான் தமிழர் விடுதலைக் கூட்டணி, புத்தளம் முதல் பொத்துவில்வரை தமிழ் ஈழ இலட்சியத்தை வைத்து போட்டியிடுகின்றது. இதேநேரத்தில், தமிழ் ஈழத்துக்கு வெளியே அங்கெல்லாம் வாழும் தமிழர்களுடைய நலன்காக்க, பாரிய விடுதலை இயக்கமாக இ. தொ. கா. போராடும்.''

இவ்வாறு காரைநகரில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி பிரசாரக் கூட்டத்தில் திரு. வண்ணை ஆனந்தன் கூறினர்.

காரைநகர் களபூமியில் வட்டுக்கோட்டை தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசுவை ஆதரித்து திரு. க. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. வண்ணை ஆனந்தன் மேலும் கூறியதாவது:-

''திரு. தொண்டமான் எமது தலைவராக இருந்தும், தமிழ் ஈழக் கொள்கையை மலைநாட்டில் கூறவில்லை என சிலர் கூறுகிறார்கள். வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மத்தியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களுக்கு தனிநாட்டைவிட வேறு வழியில்லையென திரு. தொண்டமானே கூறியுள்ளார். தமிழர் நலன்காக்க தமிழர் விடுதலைக் கூட்டணிபோல, தமிழ் ஈழம் பிரிந்த பின்னர் சிங்கள இலங்கையில் அங்கு வாழும் தமிழர்களுக்காக இ. தொ. கா. சிறுபான்மை இன இயக்க கட்சியாக, இயங்கும்.

''தமிழ் ஈழத்திற்கான அரசியல் யாப்பில், முஸ்லிம்கள் தமிழ் மக்களால் அடக்கியாளப்படமாட்டார்கள். இங்கு அவர்கள் விரும்பினல், மாநில அரசாங்கம் அமைத்து மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் ஆட்சி அமைக்க அதிகாரம் உண்டு.

வட்டுக்கோட்டைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ' வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசு பேசுகையில், ''அங்கோலா, வியட்நாம், சீன நாடுகளில் ஏற்பட்டிருந்த புரட்சியில் பாலங்கள் அமைக்கவோ, பள்ளிக்கூடம் நிறுவவோ சிந்திக்கவில்லை. இன்று தமிழர், தேர்தலுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலையில் ஒற்றுமை, தன்மானம், சுதந்திரம்பற்றிச் சிந்திக்கின்றனர். எனவே எமக்குத் தேவை சுதந்திரமே அன்றி சலுகைகள் அல்ல. எனவே நாம் சுதந்திரம் பெறுவதானல் தமிழன் பெற்ற ஒற்றுமை இத்தேர்தலின் மூலம் சிதையாது இனவிடுதலையையே குறிக்கோளாகக் கொண்டு வெற்றி காணவேண்டும்.''

(கெ-இ)

## சமநீதி பெறுதலே இலட்சியம்

### - சிவ. ஸ்ரீதரன்


யாழ்ப்பாணம், திங்கள்

''தமிழ்பேசும் இனம் சாதி மதபேதமின்றி சமநீதி சமவாய்ப்பு, சமவளம் அமைந்த சமதர்ம சமுதாயத்தை உருவாக்குதலே என் இலட்சியம்'' என்று காங்கேசன்துறைத் தொகுதியில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடும் சட்டத்தரணி திரு. சிவ. ஸ்ரீதரன் அளவெட்டியில் திரு சி. கதிரவேல் தலைமையில்நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில கூறினர்.

அவர்மேலும் கூறியதாவது: இத்தேர்தலில் வெற்றிபெறும் தமிழ்பேசும் இன உறுப்பினர்கள் அனைவரும் ஒரு கிழமைக்குள் மாநாடுகூட்டி தமிழும் சிங்களம்போல் இலங்கையின் அரசமொழி என்ற அடிப்படையில் பொது வேலைத்திட்டம் ஒன்றினைத் தயாரித்தலும் என் கொள்கைகளில் ஒன்ருகும்.

எக்கட்சி அரசு அமைத்தாலும் மூன்று மாதத்திற்குள் வட்டமேசைமாநாடு கூட்டுமாறு பணித்தல் மாநாடு கூட்டும்வரை சத்தியப்பிரமாணம் செய்யாதிருத்தல் இவ்வாறு ஒரு வருடத்திற்குள் தமிழ்ப் பேசும் இனத்தின் பிரச்னையைத் தீர்க்கத் தவறினல் பூரண சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பித்தல், காங்கேசன்துறை முகத்தை அமைத்தல் என்பதை என் கொள்கைத் திட்டத்தில் சிலவாகும்'' என்ருர்.

(உ)



மயிலர்: தேர்தல் பேச்சாளர்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?

வேலர்: எனக்குத் தெரிந்த சோதிடத்தின்படி கன்னி இலக்கினக்காரன் கன்னிபோல் கனிவாகப் பேசுவான. சிம்ம இலக்கினக்காரன் சிங்கம்போல கர்ஜிப்பான். விருச்சிக இலக்கினக்காரன் தேள் போல் கொட்டுவான். இடப இலக்கினக்காரன எருது போல் கத்துவான்.

சுந்தர்

## சுகாதாரக் கேட்டினல் விவசாயிகள் பாதிப்பு

பண்டத்தரிப்பு, ஞாயிறு

பண்டத்தரிப்புக் கிராம சபைப பிரதேசத்திலுள்ள காடாப்புலம் என்னுமிடத்திலுள்ள இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படும் இடத்திலிருந்து துர்நாற்றம் வீசுவதாகவும், கழிவுப் பொருட்கள் அங்கு சரியான முறையில் புதைக்கப்படுவதில்லை என்றும் இதனல் இந்த நிலையத்திற்குப் பக்கத்திலுள்ள காணிகளில் பயிர்செய்துவரும் பல விவசாயிகள் மிகவும் சிரமப்படுவதாகவும் அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

வெட்டப்படும் மாடுகளின் கொம்பு, குடல்கள் என்பன போன்ற கழிவு உறுப்புக்களை காகங்கள் பறவைகள் போன்றவை தூக்கிக்கொண்டு வந்து அயலிலுள்ள வீடுகளிலும், வயற்காணிகளிலும் போடுவதாகவும் இவர்கள் பலத்த புகார் தெரிவிக்கின்றனர், மேலும் உழுவதற்காக மாடுகளை தங்கள் காணிகளுக்குக் கொண்டுவரும்போது இந்த மாடு வெட்டும் நிலயத்திலிருந்து வீசும் துர்நாற்றத்தினல் மாடுகள் யாவும் வெருண்டு ஓடுவதாகவும், இதனல் தமது விவசாய வேலைகள் மிகவும் பாதிக்கப்படுவதாகவும் இவர்கள் மேலும் புகார் தெரிவிக்கின்றனர். இதுபற்றி சுகாதார மேலதிகாரிகளுக்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

(அ)

## ''தமிழினக் கட்டுக்கோப்பை எவரும் தகர்க்க முடியாது''

— அமிர்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

''எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் அளிக்கவிருக்கும் ஏகோபித்த ஆதரவின் மூலம் எங்கள் பிரிவினைக் கோரிக்கை அகில உலக நாடுகளிலும் எதிரொலிக்கவிருக்கிறது. இன்று தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பின்னல் திரண்டு தங்கள்ஜீவாதார உரிமைகளை வென்றெடுப்பதற்குத் தமிழினம் எவ்வித வேறுபாடுகளும் இல்லாது ஒற்றுமையுடன் தயாராக நிற்கின்றது. தமிழினத்தின் கட்டுக்கோப்பையும் ஒற்றுமையையும் சிதைக்க எந்தச் சக்தியாலும் முடியாது.''

இவ்வாறுகாங்கேசன்துறைக் கூட்டணி வேட்பாளரும் தமிழர்விடுதலைக்கூட்டணிச்செயலதிபர்களில்ஒருவருமான திரு. அ. அமிர்தலிங்கம் தம்மை ஆதரித்து பெரியவிளான் சந்திக்கு அருகாமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார். சட்டத்தரணி செல்வி ரெஜினு அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள எமது பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாக்கவும், தமிழ்மாணவர்களின் உயர்கல்விக்கு ஏற்பட்ட முட்டுக்கட்டையான தரப்படுத்தலை நீக்கவும இழந்த தமிழ்மொழியின் அரசுரிமையை மீண்டும் பெறவும் எமது கலை, கலாச்சாரங்களை பேணிப்பாதுகாக்கவும் தமிழர் விடுதலைக்கூட்டணி காட்டும் வழிதான் சிறந்த ஒரேயொரு வழியென்று சகல தமிழ் பேசும் மக்களும் நன்கு உணர்ந்துவிட்டார்கள். சில சுயநலவாதிகள் பலவிதமானபொய்ப்பிரசாரங்களையும், குதர்க்கவாதங்களையும் கூறி மக்களைத் தவருன பாதைக்கு அழைத்துச்சென்று தமது சுயஇச்சைகளைத் தீர்த்துக் கொள்ளமுனைந்திருக்கின்றனர். தனித்தமிழ்ஈழம் நிறுவி உரிமைபெற்ற இனமாக வாழ்வதுதான் தமது இறுதிமுடிவு என்ற இலட்சியப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் பேசும் மக்களை இனி எவராலும் ஏமாற்றமுடியாது. உண்மையானஇலட்சியப்பற்றுடன் தேர்தல் களத்தில் இறங்கியுள்ள தமிழர் கூட்டணி வேட்பாளர்கள் அனைவரையும் வெற்றிபெறச்செய்து வாக்காளப்பெருமக்கள் புதியஅத்தியாயம் படைப்பார்கள் என்பதில் ஐயமில்லை ''

சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு, மாவை சேனதிராசா, இறைகுமாரன், மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர்கள். (அ

யாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

## ஈழநாடு

### தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

### போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளிலும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப்பிடுக:-

| தொ.இல. | தொகுதி | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | ........................ |
| 80. | வட்டுக்கோட்டை | ........................ |
| 81. | காங்கேசன்துறை | ........................ |
| 82. | மானிப்பாய் | ........................ |
| 83. | கோப்பாய் | ........................ |
| 84. | உடுப்பிட்டி | ........................ |
| 85. | பருத்தித்துறை | ........................ |
| 86. | சாவகச்சேரி | ........................ |
| 87. | நல்லூர் | ........................ |
| 88. | யாழ்ப்பாணம் | ........................ |
| 89. | கிளிநொச்சி | ........................ |
| 90. | மன்னார் | ........................ |
| 91. | முல்லைத்தீவு | ........................ |
| 92. | வவுனியா | ........................ |
| 94. | திருகோணமலை | ........................ |
| 95. | மூதூர் | ........................ |
| 96. | கல்குடா | ........................ |
| 97. | மட்டக்களப்பு (1) | ........................ |
| | (2) | ........................ |
| 98. | பட்டிருப்பு | ........................ |
| 100. | சம்மாந்துறை | ........................ |
| 101. | கல்முனை | ........................ |
| 102. | பொத்துவில் (1) | ........................ |
| | (2) | ........................ |
| 103. | புத்தளம் | ........................ |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ............ | ............ | ............ |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிகஅதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ............ | ............ | ............ |

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ............ | ............ | ............ |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப்பிடுக.

| தொ.இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |
| 84. | உடுப்பிட்டி | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |
| 85. | பருத்தித்துறை | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |
| 97 | மட்டக்களப்பு | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |

தபாற்கட்டளை/ காசுக்கட்டளை இல ............ ரூபா ............ இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், ஏனைய கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியிடப்படும் "ஈழநாடு தேர்தல்-77போட்டி" நிபந்தனைகளுக்கும் அதன்நடுவர் குழு"வின் தீர்மானத்துக்கும்கட்டுப்படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ... ...

திகதி ............

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காளருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத் தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக்கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையே இப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன் ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பு: (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படிவாக்குகள் = அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றாவதாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்துவரும் தொகைகளாகும். போட்டி முடிவுதிகதி 20-7-1977

# இனியும் பின்னால் செல்ல தமிழன் தயாரில்லை

**—தொண்டமான்**

ஓமந்தை, ஞாயிறு

''இந்த நாட்டில் பரம்பரையாக வாழ்ந்துவரும் தமிழினம் சிங்கள அரசுகளால் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு உரிமைகள் பறிக்கப்பட்ட பின்னரும் அமைதியாக இருக்க வேண்டும் என எண்ணுவது புத்திசாலித்தனமல்ல. அந்தக்காலம் மலையேறிவிட்டது. இனியும் எந்தச் சிங்கள அரசுக்கும் பின்னால் செல்ல தமிழன் தயாரில்லை.'

இவ்வாறு இ. தொ. கா. தலைவரும், தமிழர் கூட்டணியின் தலைவருமான திரு.செள. தொண்டமான் வவுனியா பண்டாரிக்குளத்தில் நடைபெற்ற கூட்டணி வேட்பாளர் திரு. தா. சிவசிதம்பரத்தை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் வட்டுக்கோட்டை, கண்டிய தீர்மானங்களில் அடிப்படையில் தமிழர்களின் இழந்த உரிமைகளைப் பெறுவதற்குத் தமிழ் மக்களாகிய நீங்களே சர்வசன வாக்கெடுப்பு மூலம் தீர்ப்புக் கூறவேண்டியவர்கள் என்றார். இக்கூட்டத்தில் திருவாளர்கள் சிவதாசன், புஷ்பராசா ஆகியோரும் உரையாற்றினர். (இ)

# கட்டாக்காலிகளை பிடிக்கின்றனர்

உடுப்பிட்டி, ஞாயிறு

துன்னாலை தெற்குக் கிராம சேவகர் பகுதியில் பயிர்களை நாசம் செய்யும் கட்டாக்காலிகளையும் பிடிப்பதில்தொண்டர் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் மூலம் இப்பகுதி விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். (அ)

"யு. என் பி. ஆட்சியில்

# தகுதி அடிப்படையிலேயே உயர் கல்வி வசதிகள்"

## காவலூர் வேட்பாளர் உரை

யாழ்ப்பாணம், திங்கள்

'எமது ஆட்சியில் தமிழ் மாணவரின் பொது எதிரியான தரப்படுத்தல் முற்றாகத்தூக்கி எறியப்படும். பல்கலைக்கழகக் கல்விமுறை ஒருமுகப்படுத்தப்பட்டுத் தகுதிஅடிப்படையிலேயே உயர்கல்வி வசதிகள் வழங்கப்படும்' என்று ஊர்காவற்றுறையில் ஐ.தே.க.வேட்பாளராகப் போட்டியிடும் திரு. ம. அமிர்தலிங்கம் ஊர்காவற்றுறையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

### தமிழ்மொழி

இலங்கையில் நிலவும் பஞ்சம், பசி, பட்டினி, ஊழல் ஆகியவற்றை நீக்கி, மக்களுக்கு ஒரு சுபீட்சமான வாழ்வை அளிப்பதற்கு இலங்கையின் பொருளாதாரத் திட்டத்தில் உடனடி நிவாரணம் செய்யப்படவேண்டியது அவசியம். இப்பொருளாதார சுபீட்சத்தைத் திட்டமிடுவதற்குத் தயாராக இருக்கும் தேசியப் பிரச்னைகளில் முக்கியமான தமிழ்பேசும் மக்களின் அடிப்படை உரிமைப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணப்படுதல் அத்தியாவசியமானது.

எனவே எந்த இனத்தைச் சேர்ந்தவராகிலும் இனம், மதம், மொழி, சாதி ஆகிய பேதங்களுக்குக் கட்டுப்படாமல் ஒரேவிதமான - சரிசமமான உரிமைகளையும், வசதிகளையும் எமது கட்சி புதிய அரசியலமைப்பில் சட்டமூலம் உறுதிப்படுத்தும். அத்துடன் இலங்கையிலுள்ள பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய பாரம்பரியம் பேணப்பட்டுச் சட்டமூலம் பாதுகாக்கப்படும்.

தமிழ், முஸ்லிம் மக்களின் பலவிதமான பிரச்னைகள் தேசிய ஒற்றுமையையும், பொருளாதார வளர்ச்சியையும் நோக்கமாகக்கொண்டு உடனடியாகத் தீர்த்துவைக்கப்படும். அவர்களை எதிர் நோக்கியிருக்கும் மொழியுரிமை, கல்வி, குடியேற்றம், அரசபதவிகள் ஆகியன பற்றியபிரச்னைகளைத் தீர்த்துவைக்கும் நோக்குடன் மாவட்டங்கள் தோறும் 'மாவட்ட அதிகாரசபைகள், நிறுவப்படும். அத்துடன் சர்வகட்சி மாநாட்டைக்கூட்டி, மேற்படி பிரச்னைகளுக்கு நிரந்தரத்தீர்வு கண்டு அவை புதிய அரசியலமைப்பில்இடம்பெற வழிவகை செய்யப்படும்.

### பொருளாதாரம்

காவலூரர்த் தொகுதியின் பொருளாதார முன்னேற்றம் பெரும்பாலும் பனைவளத்திலும், கடல்வளத்திலும் தங்கியுள்ளது. இந்தவகையில் இத் தொகுதியில் குறிப்பிடத்தக்கதாக எந்த அபிவிருத்தியும் செய்யப்படவில்லை. கற்பகதரு வெனக்கூறப்படும் பனை அரசாங்க மான்யஉதவித்திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டு, பாதுகாக்கப்பட்டு அதன்மூலப் பொருள்களை நவீனயந்திர வசதிகளடங்கிய தொழிற்சாலைகள்மூலம் பயன்படுத்தித் தொகுதியின் இளைஞர்கட்கும் யுவதிகட்கும் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். சுண்ணம்புக்கல்லை அடிப்படையாகக்கொண்டு நெடுந்தீவில் ஒரு பெயின்ற் தொழிற்சாலையும், சிப்பியை மூலப்

[7-ம் பக்கம் பார்க்க]

# சுவீகரித்த கட்டிடங்களை திரும்பப் பெறமுயல்வேன்

## வட்டு. ஐ. தே. க.வேட்பாளர்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

''தற்போது இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகத்தின் ஒரு பகுதியாக இயங்கி வரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை மீண்டும் கல்லூரி நிர்வாகத்தினரிடம் திருப்பிக் கொடுப்பதற்கு ஆவன செய்வேன்''

இவ்வாறு வட்டுக்கோட்டைத்தொகுதி ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் திரு. நா. இரத்தினசிங்கம் தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு காலையடியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ரி. ராஜகோபால் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறுயதாவது;-

யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டைத் தொகுதி மக்களின் கல்வி வளர்ச்சிக்கு முக்கிய சாதனமாக இருந்து வந்தது. தற்போது அங்கு இயங்கிவரும் யாழ். வளாகத்தின் பிரிவை திருநெல்வேலியிலுள்ள வளாகப் பிரிவுடன் இணைப்பதன் மூலம் மீண்டும் இக் கல்லூரி பழைய சிறப்புடன் இயங்கச் செய்வதற்கு ஐ. தே. கட்சி அரசில் நான் நடவடிக்கை மேற்கொள்ளுவேன் என்பதை உறுதியுடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

வட்டுக்கோட்டைத் தொகுதியின் தேசிய பேரவை உறுப்பினராக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் பின்வரும் திட்டங்களையும் நடைமுறைப் படுத்த விருப்பதாக திரு. இரத்தினசிங்கம் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தார்.



வழுக்கை ஆற்றைத் தடுத்து நிறுத்தி அதன்மூலம் நீர்ப்பாசனத்திற்கு வழிவகுத்தல்.

குடிநீர் குன்றியபகுதிகளுக்கு குழாய்மூலம் தண்ணீர் விநியோகம் செய்தல். கடற்றொழிலாளர், உழவர், தச்சுவேலை புரிவோர் மற்றும் வேறு தொழில் புரிவோரது பிரச்னைகளைத் தனித்தனியாக நோக்கி ஆவன செய்தல்.

மின்சார வசதி பெறாத இடங்களுக்கு மின் விநியோகம் செய்து கொடுத்தல்.

தமிழ்மொழி, தமிழர் மதம், தமிழர் கலாச்சாரம் முதலியன வளர ஏற்ற நடவடிக்கை எடுத்தல்.

சிறிய கைத்தொழிற் சாலைகளை தொகுதியின் பல பகுதிகளிலும் அமைத்து வேலையற்றவர்களுக்கு தொழில் வசதிகளை ஏற்படுத்துதல்.

ஐ. தே. கட்சி வடபகுதி அமைப்பாளர் திரு. ஆர். ஆர். நல்லையாவும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார். [இ]

# சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் சோதனை!

கொழும்பு, ஞாயிறு

சந்தேகத்திற்கிடமான வாகனங்களைச் சோதனை இடுமாறு பொலிசாருக்கு உத்தரவு கிடைத்துள்ளது. இதனால் பொலிசார் வாகனங்களைப் பரிசோதித்து வருகின்றனர்.

சில தினங்களுக்குமுன் இரவு 7 மணிக்கு தெமட்டகொட சப்-இன்ஸ்பெக்டர் வாகிஷ்டர் பஸ்நிலையத்தில் பார்சலுடன் நின்ற ஒருவரைக் கண்டார். அவரது நடத்தை சந்தேகத்திற்கிடமாக இருந்தமையினால் அந்த நபரை அழைத்து, அவர் விசாரித்தபோது, அவரது கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் அவர் தடுமாறினாராம்.

அவரது கையிலிருந்த பார்சலை சப்-இன்ஸ்பெக்டர் வாங்கியபோது அவர் ஓடமுற்பட்டார். உடனடியாக அவரைப் பிடித்துக் கொண்டசப்-இன்ஸ்பெக்டர் பார்சலைப் பிரித்தபோது அதற்குள் இரண்டு 'மாமைட்' போத்தல்களில் செய்யப்பட்ட கைக்குண்டுகள் இருந்தன.

உபாலி என்ற இந்த நபர் பொலிஸ் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார்.

# நால்வர் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மெயின் வீதியில் டாக்டர் ஒருவரின் வீட்டில்மின்சார தொலைபேசி கம்பிகள் களவு போனது சம்பந்தமாகச் சந்தேகத்தின் பேரில் நான்கு இளைஞர்களை குருநகர்ப் பொலிசார் கைது செய்தனர்.

இவர்கள் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது 250-ரூபாபிணையில் விடுமாறும் அடுத்த மாதம் 18-ம்திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதவான் உத்தரவிட்டார். (கு-அ)

**சாந்தி** யாழ். நகர் போன்: 7642 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

ஜெமினி - பத்மினி - சுந்தரராஜன் - சோ

**தேரோட்டம்**

(புதிய பிரதி)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி நடித்த

ஜெயேந்திரா மூவிஸ்

**காத்திருப்பேன் உனக்காக**

**ராணி** (யாழ்ப்பாணம்) 75-வது நாள்

எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த

தினசரி 4 காட்சிகள்

**நாளை நமதே**

(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ்நகர்) 72-வது தினம் தினசரி 4 காட்சிகள் போன்: 7180

தேவரின் **திருவருள்** (ஈஸ்ட்மன்கலர்)

குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

**REGAL** (JAFFNA) Daily at 4-45, 7-00 & 9-30 p.m. only

ROBERT LOUIS STEVENSON'S CLASSIC

**TREASURE IsLAND**

(Color)

**மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சுந்தரராஜன்-சௌகார்ஜானகி

**ஆ ல ய ம்**

வெகு விரைவில் வருகிறது

எம். ஜி. ஆர் — லதா நடித்த

**உழைக்கும் கரங்கள்**

**RIO** (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m. Now Showing

Sex Comedy

**CHASTITY BELT**

(கற்புக் கவசம்)

(Adults Only)

**வெலிங்டன்** [யாழ்.நகர்] தினசரி 4 காட்சிகள்

விஜயகுமார் — ஜெய்சித்ரா

**தாய் இல்லாக் குழந்தை**

**லிடோ** போன்: 7693 (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

ஜெய்சங்கர்—சுஜாதா

**நீ ஒரு மகாராணி**

மகத்தான 2-வது மாதம்

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - பத்மபிரியா முத்துராமன் - சகுந்தலா நடித்த

ஸ்ரீதரின் **வைரநெஞ்சம்**

(ஈஸ்ட்மன் கலர்)


## தகுதி—

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

பொருளாகக் கொண்டு மண்டைதீவில் ஒரு தொழிற்சாலையும், உவர்நிலத்தில் சீனி வற்றுளைப் பயிர்ச்செய்கை மூலம் புங்குடுதீவில் ஒருசீனித் தொழிற்சாலையும், தொகுதிக்குப் பொதுவாக மாபெரும் மின்தறி நிலயம்ஒன்றும் நிறுவும் திட்டம் உண்டு.

## பிரச்னைகள்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளவு தூரத்திற்கு நான் மக்கள் சேவைக்குத் துணிவுடன் போராடியவன். பயந்து ஒடியவனல்ல எனக்கு எதிராகத் தகுதி கேட்டு பொய்ப் பிரசாரம் செய்பவர்களது கருத்துக்குக்கு யாரும் செவி சாய்க்காதீர்".

கூட்டம் ஆரம்பமாகுமுன் டாக்டர் நான்கு பொய்க்கால் குதிரை ஓட்டக்காரக்களின் வரவேற்போடு ஊர்வலமாக அரங்கிற்கு அழைத்துவரப் பட்டார். பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் அமைக்கப்பட்டிருந்த அரங்க முகப்பு தராசு வடிவில் அமைந்து மின் குமிழ்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அதற்குமேல் ஏ.எல் ஏபிரகாம் என்ற பெயரும் மின் குமிழ்களில் பளிச்சிட்டது. வீதியிலே மின் குமிழ் அலங்காரவளைவொன்று நிறுவப்பட்டிருந்தது. டாக்டர் பேசும்போது 45 நிமிடத்திற்கும் அதிகமாக வெடிகள் அதிர்ந்தன. ஆயிரக் கணக்கான மாலைகளை ஆதரவாளர்கள் அணிவித்தனர். காசுமாலை, சொக்லேட் மாலை, றம்புட்டான்பழமாலை என்பனவும் அணிவிக்கப்பட்டன. குருநகர் வீதிகளெங்கும் மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. டாக்டர் தொடர்ந்து தமது துரையில், "உங்களின் அன்பு என்னைத் திணறடிக்கின்றது. நான் அரசாங்க வைத்திய சேவையிலிருந்து விலகிய போது பலர் என்னை ஊர்காவற்றுறைப் பகுதியில் வைத்திய சேவையில் ஈடுபடும்படி கேட்டார்கள். எனது யாழ்ப்பாண மக்களுக்குநான் பிறந்து வளர்ந்து கல்விகற்றமண்ணில் உள்ள மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கத்துடன் தான் இப்பகுதியில் எனது வைத்திய சேவையை வழங்க முன்வந்தேன்" என்றார்.

ஈச்சமோட்டை எஸ். பாலசிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர். [கூ. அ]

## தாலிக்கொடி திருட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

அதிகாலை வேளை பெண்மணி ஒருவரின் தாலிக்கொடி திருடப்பட்டது.

திருநெல்வேலியில் நடைபெற்ற இச் சம்பவம் தொடர்பாக யாழ் பொலிசார் சந்தேகத்தின் பேரில் ஸ்ரீஸ்கந்தராசா என்ற வாலிபரைக் கைதுசெய்துள்ளனர். (கு-உ)


**வெஸ்லி**

(மானிப்பாய்)

தினசரி 6-30, 9-30

சனி ஞாயிறு 2-30

ஜெய்சங்கர் - லஷ்மி

**ராணி யார் குழந்தை**

**நாகம்ஸ்**

(சுன்னாகம்)

தினசரி 6-30, 9-30

சனி ஞாயிறு 2-30

சிவாஜி நடித்த

**ஹரிச்சந்திரா**

**புலோலி சினிமாஸ்**

(பருத்தித்துறை)

தினசரி 6-30 9-45

சனி, ஞாயிறு 2-30

ரவிச்சந்திரன்-லதா

**வீட்டுக்கு வந்த மருமகள்**


# 'தனிநாடு கிடைத்தால் நமது வெங்காயத்தை விற்பதெங்கே?'

### மூன்றாள் வட்டு. எம். பி. கேள்வி

சங்கானை, ஞாயிறு

தமிழர் விடுதலைக்கூட்டணியின் கோரிக்கைப்படி தனிநாடு கிடைத்தால் வடபகுதியில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம் மிளகாய்போன்ற விளை பொருள்களை எங்கே விற்க முடியும்? இதனால் பாதிக்கப்படுபவர்கள் ஏழை விவசாயிகளே!

சங்கானை சந்தை மைதானத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், முன்னாள் வட்டுக்கோட்டை எம்.பி.யும் அபேட்சகருமான திரு. ஏ. தியாகராசா மேற்கண்டவாறு கூறினார்.

திரு, பொ.சிவகுரு தலைமையில் நடந்த கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது;-

'தனிநாடு என்பது தற்கொலைக்குச் சமம் என விவாதம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய திரு. அமிர்தலிங்கம் இப்போ அதை எப்படி ஏற்றுக்கொண்டார் என்று தெரியவில்லை. எமது பிரதேசத்தை வளம்பெறச்செய்வதற்கு ஒற்றை ஆட்சியின்கீழ் கைத்தொழில், கடற்றொழில், கமத்தொழில் போன்றவற்றை மேலும் அபிவிருத்தியடையச் செய்தல்அவசியம்.

பொருளாதாரம் படித்தவர்கள் கூட்டணியில் எவரும் இன்மையாலேயே தனிநாடு என்று கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றப்பார்க்கிறார்கள். இந்தியாவில் பதினெட்டு மொழிகள் உண்டு. அவை ஒவ்வொன்றிற்கும் தனிநாடு உண்டா? அறிஞர் அண்ணாத்துரையே தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டார். அதன்காரணம் பிரிவினைதமது இனத்தைப் பலவீனப்படுத்தும் என்பதனாலேயே. எனவேதான் இந்தியாவிலிருந்து இந்த நாட்டில் குடியேறிய நாம் நாட்டை இரண்டாக்குவதை எவரும் சம்மதிப்பாரா?

வடக்குகிழக்குமாகாணங்களில் விளையும் நெல் இப்பகுதி மக்கட்கு இரண்டுகிழமைகளுக்கு மட்டும் போதுமானது. ஏனைய உணவுப்பொருளான மாவை எங்கே வாங்குவது? இங்கு விளைபவற்றை உலகச்சந்தையில் எங்கே விற்பது?

தரப்படுத்தலை மன்னார் திருகோணமலை, மட்டக்களப்புப் பிரதிநிதிகள் எதிர்க்கவில்லை. யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களில் உள்ளோரே எதிர்க்கின்றனர். ஆனால் பின்தங்கிய இடங்களில் உள்ளவர்களின் பிள்ளைகட்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது. பலனும் கிட்டியது.

நாட்டின்கடமை, இனக்கடமை தொகுதிக்கடமை போன்றவற்றை முன்வைத்தே எனதுஅரசியலை நடத்தினேன். இதன்படி ஏனைய தொகுதிகள் பல் முகப்படுத்தப்பட்ட வரவு செலவில் எனது தொகுதிக்கு மட்டும் 62 லட்சம்ரூபாபெற்று முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளேன்.

# "மாணவர் குறைபாட்டை பெற்றோர் அறிய முடியாதிருக்கிறது"

சுழிபுரம்,ஞாயிறு

"இன்றைய காலங்களில் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்குமிடையிலான உறவு குறைந்துள்ளதனால், மாணவர்களுடைய குறைபாட்டைப் பெற்றோர் அறியமுடியாமல் இருக்கிறது. இதனால் ஒவ்வொரு மாணவனையும் நற் பிரஜைகளாகத் தவறிவருகின்றோம்" என்று காரைநகர் மெய்கண்டான் வித்தியாசாலைப் பெற்றோர் தினவிழாவில் பழைய மாணவன் செல்வன்சோ. விமல தர்மசூரியா குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்குப் பாடசாலை அதிபர் திரு.கு.செல்லத்துரை தலைமை வகித்தார்.

அதிபர் பேசுகையில், இப் பாடசாலையின் இன்றையபெரு வளர்ச்சிக்குப் பெற்றோர் வழங்கிய ஆதரவே காரணமாமென்றும், தொடர்ந்தும் ஆதரவு நல்கி மேலும் வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இல்ல விளையாட்டுப் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (கெ-அ)

# "அரசுக்கு ஆதரவளித்தாலும் எமக்கு உரிய அந்தஸ்து இல்லை"

கொழும்பு, ஞாயிறு

இலங்கையை ஆண்டுகொண்டிருந்த சகல அரசியற் கட்சிகளுக்கும் ஏதோ ஒரு விதத்தில் தமிழர்களும் முஸ்லீம்களும் ஆதரவளித்தே வந்திருக்கிறார்கள். ஆதரவளித்தவர்களுக்கும் உரிய அந்தஸ்தை சிங்கள அரசாங்கங்கள் என்றுமே அளித்தது கிடையாது"

இவ்வாறு ஊர்காவற்றுறைத் தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் கொழும்பு பழைய சோனகத்தெருவில் திரு. எம். செல்லச்சாமியை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் திரு. ம சு. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. மகேந்திரன் மேலும் பேசுகையில் கூறியதாவது: ரி. பி ஜயா தொடக்கம் எம். எச் முகமது வரை மந்திரிகளாக இருந்தார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அமைச்சு தொழில் அமைச்சு அதேபோன்று சிற்றம்பலம் தொடக்கம் குமாரசூரியர் வரைக்கும் கொடுக்கப்பட்ட அமைச்சு தபால் அமைச்சுத்தான். எனவே தமிழர்கள் மீது பாரிய நம்பிக்கையை வைக்க சிங்கள அரசுகள் மறுத்தமையினாலேதான் தகுதி வாய்ந்த அவர்களுக்கு உரிய பொறுப்பான அமைச்சுகள் வழங்கப்படவில்லை. இதன் மூலம் சிறுபான்மை இனங்களை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு, நம்பிக்கையற்றநிலையிலேதான் பெரும்பான்மைக் கட்சிகள் நடத்துகின்றன. என்பது புலனாகிறது. முப்படைத் தளபதிகளில் ஒரு முஸ்லிமையோ தமிழரையோ காண முடியவில்லை. பெரும் வியாபாரிகளாக இருந்த முஸ்லிம்களின் வியாபாரம் திட்டமிட்டு முறியடிக்கப்பட்டு மாணிக்கக்கல், இரத்தினக்கல் வியாபாரங்கள் அரசுடமையாக்கப்பட்டன.

கடந்த ஏழு ஆண்டுகளில் நாற்பத்தைந்துக்கு மேற்பட்ட இடங்களில் முஸ்லீம்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். எனவே நாம் ஒன்றுபட்டுப் போராட வேண்டியது அவசியமாகும். சிறுபான்மை இனங்கள் ஒன்றுபட்டால்தான் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும். எனவே கொழும்பு மத்தியில் முஸ்லிம்களும் தமிழர்களும் ஒன்றிணைந்து செல்லச்சாமியை வெல்லவைத்து தமிழர் ஐக்கியத்தைப் பலப்படுத்த வேண்டும்."

இக்கூட்டத்தில், கூட்டணி மொழிவழித் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்படப் பலர் பேசினா[illegible].


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

ஈழநாடு
EELANADU

# "தமிழாசிரியர்க்கு இடர்வரின் கூட்டணி முழுமூச்சுடன் எதிர்க்கும்"

## சித்தன்கேணியில் 'அமிர்' விளக்கம்

சங்கானை, ஞாயிறு
"நாட்டிலும் தேசியப் பேரவையிலும் பலம் வாய்ந்த ஒரு கட்சியாகத் திகழப்போகும் தமிழர் விடுதலைக் கூட்டணி இலங்கைத் தமிழா ஆசிரியர் சங்கத்துக்கு இன்னல் விளைவிக்கப்பட்டால் அதனை முழுமூச்சாக எதிர்க்கும்என்பதைதிட்டவட்டமாக இச்சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன்"

இவ்வாறு தமிழர்விடுதலைக் கூட்டணி செயல் அதிபரும் காங்கேசன்துறைத் தொகுதி வேட்பாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்க வட்டுக் கோட்டை கிளைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

ஆசிரியர் திரு. க. பரமலிங்கம் தலைமையில் சித்தன்கேணி த. வி. கூ. காரியாலயத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- "கிராமவளர்ச்சிக்கும் மக்களுக்கு வழிகாட்டியாக நின்று எதிர்கால சந்ததியினரை நற்பிரஜைகளாக்கி சிறந்த அரசியல் வாதிகளை உருவாக்குவதும் ஆசிரியர்களே எனவேதான் இவர்களின்பணி அளப்பரியதாகும்.

தமிழர் ஒரு தேசிய இனம் என்பதை வட்டுக்கோட்டை மாநாட்டில் பிரகடனத்தின் அடிப்படையிலே த. வி. கூட்டணி பிரிவினைக் கோரிக்கையை எதிர்வரும் தேர்தலில் முன்வைத்துள்ளது. நாம் தேர்தல் சகல தொகுதிகளிலும் வெற்றிபெறுவது நிச்சயம். ஆனல் வெற்றியல்ல எமக்குப் பெரிது. மக்கள் எமது கோரிக்கைக்கு எப்படி பெரும்பான்மை வாக்குகளை கொடுத்து தமிழ் ஈழம் அமைக்க உத்தரவு கொடுக்கிறர்கள் என்பதே முக்கியம். இதனையே அகில உலகமும் எதிர்பார்த்துள்ளது இதுவே எமதுஇலட்சியமுமாகும். ஆசிரியர்களாகிய நீங்கள் எமது சமுதாயம் எதிர்கால சந்ததியினர் நாட்டு வளர்ச்சி என்பவற்றுக்காக ஒன்றுபட்டு இயங்கி தீயசக்திகளை முறியடித்து தமிழ் ஈழம் அமைக்க ஏகோபித்த ஒத்துழைப்பை வழங்கவேண்டும். தமிழ் ஈழத்திலேயே தமிழ் ஆசிரியர்கள் தமது கடமையை சரிவர ஆற்ற ஏதுவாக அமையும்,"

### வட்டு வேட்பாளர் உரை

வட்டுக் கோட்டைத் தொகுதி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசு கூறியதாவது:

"வட்டுக்கோட்டை மாநாட்டுத்தீர்மானத்தில் இருபெரும் தமிழ்க்கட்சிகளும் ஒன்றுபட்டு தமிழன் தன் ஆதிக்கமுள்ள சுயநிர்ணய உரிமையுடன் தனித்தமிழ்நாடே வழியென தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படைக் கொள்கையில் நிற்கும் த. வி. கூட்டணி வேட்பாளர்களை அமோக வெற்றியீட்டவைப்பது ஆசிரியர்கள், மக்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. நடைபெறவிருக்கும் தேர்தல் குடியரசுப் பிரகடனத்தின்பின் நடைபெறும் தேர்தலாகும் இதிலேயே எமது பிரிவினை இலட்சியத்தை நிறைவேற்றி சிங்கள அரசிற்கும் அகில நாடுகளுக்கும் எடுத்துக்காட்டாக அமைய பெரும்பான்மை வாக்குகளை இட்டு த. வி. கூ. வெற்றியீட்டச் செய்தல் அவசியம்"

மற்றும் ச. பரமலிங்கம், வே, தம்பையா, எஸ். சிவபாலசிங்கம் மாவட்டசெயலாளர் க. வேல்முருகன், மகாசிவம், சிவமணி மற்றும் பலர் உரையாற்றினர். (உ)

# ஈழத்தமிழர் பிரச்னையில் ரஷ்யா ஏன் அக்கறை?

## துன்னலைக்கூட்டத்தில் விளக்கம்

உடுப்பிட்டி, ஞாயிறு
"உலக நாடுகளின் அபிப்பிராயத்தையும் வல்லரசுகளின் உதவிகளையும் பெறவுமே சர்வஜனவாக்கெடுப்பாக நாம் இத் தேர்தலைக் கருதுகின்றேம். இந் நிலையில் தமிழர் சிந்தித்துச் செயற்படவேண்டும்"

இவ்வாறு துன்னலையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தமிழ் இளைஞர் பேரவையைச்சேர்ந்த திரு. சந்ததியார் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் உடுப்பிட்டித் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. த. இராஜலிங்கம் தலைமையில் நடைபெற்றது. திரு. சந்ததியார் தொடர்ந்து பேசும் பொழுது கூறியதாவது:

'தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையோ, யு. என். பி.யையோ நம்பி எந்தவிதபயனும் இல்லை என்பது கடந்த காலச் சம்பவங்களில் இருந்து தெளிவாகத் தெரிகின்றது' இந்த இரு கட்சிகளும் மாறி மாறி ஆட்சிக்கு வரினும் தமிழினத்திற்கு விமோசனம் கிடைக்காது. இந்தியாவில் மொரார்ஜிதேசாய் அரசாங்கம் அமைந்தவுடன் இந்திரா அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்துவந்த சோவியத் ரஷ்யா, சீன போன்ற நாடுகள் தமது ஆதரவுகளை நிறுத்தியுள்ளன. இதேநிலைதான் இலங்கைக்கும்.

'இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சோவியத் ரஷ்யா, சீன போன்ற நாடுகள் தமது ஆதரவுகளை வழங்கி வருகின்றன. ஆனல் யு. என். பி அரசாங்கம் அமைக்கும் பட்சத்தில் சோவியத் ரஷ்யா, சீன போன்ற நாடுகள் தமது ஆதரவையும், உதவிகளையும் நிறுத்திவிடும். அமெரிக்கா போன்ற நாடுகள் ஆதரவும், உதவியும் அளிக்கமுன்வரும். இந்தநிலையைச் சிந்திதது்தான் ஆசியாவில் தமது பலத்தை நிலைநிறுத்தும் நோக்கமாக சோவியத் ரஷ்யா தமிழர் விடுதலைக் கூட்டணியின்பிரச்னையான தனித்தமிழ் ஈழப் பிரச்சினையை அறிவதற்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அறியமுன்வந்துள்ளது இதேபோல ஜப்பான், பிரிட்டிஷ், போன்ற நாடுகளும் தமிழ்ஈழம் கோரிக்கையில் அக்கறைகாட்டி வருகின்றன.

'சோவியத் ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகள் 1958ல் இதேபோன்று தமிழர் பிரச்னையில் கவனம் செலுத்தி இருந்தால் நாம் அப்போதே தமிழ் ஈழத்தைப் பெற்றிருப்போம்'

திரு. வண்ணை ஆனந்தனும் பேசினர். (அ)

# 'ஒற்றை ஆட்சியே இன்றும் எமது கொள்கை

## — குமார்

யாழ்ப்பாணம், திங்கள்
"1944 ம் ஆண்டு தொடக்கம் அன்றிருந்ததுபோலவே எமது கொள்கை ஐக்கிய இலங்கை என்பதுதான் அதனை நாம் இன்றுவரை கைவிடவில்லை. இனியும் தமிழ்க்காங்கிரஸ் கட்சி ஐக்கிய இலங்கைக்காகவே போராடும். அது கிடைக்காத பட்சத்தில்தான் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும்."

இவ்வாறு யாழ்ப்பாணம் தொகுதி சுயேச்சை வேட்பாளரும் தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணித் தலைவருமான திரு. குமார் பொன்னம்பலம் தமக்கு ஆதரவாக நரிக்குண்டில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சட்டத்தரணி திரு. ஜிம்மி இராஜரத்தினம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. வீதியில் மின்சார அலங்கார வளைவொன்று நிறுவப்பட்டிருந்தது.

திருமதி அந்தோனியா சுவாமிநாதர் பேசுகையில், "கூட்டணியினர் தங்களது கொள்கை அகிம்சை என்று சொல்கின்றர்கள். மகாத்மா காந்தி தமது அகிம்சைப் போராட்டத்தால் பிரித்தானியரை இந்தியாவிலிருந்து விரட்டினர் அதனைக் கடைப்பிடிப்பது மிகுந்த கஷ்டமானது" என்ருர்.

மற்றும் திருவாளர்கள் எஸ். சொல்வேந்தன், ரி. மகேந்திரராஜா. கிட்ணர், எஸ். எம். மீரான் சாகிப் உட்படப் பலர் உரையாற்றினர். [கூ-அ[

# "தம்மைத்தாமே ஆள தமிழினத்திற்குஉரிமை உண்டு"

## யோகேந்திரா கூறுகிருர்

நயினதீவு, ஞாயிறு
"தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரும்பான்மையினர் கூட்டணியிலிருந்து விலகிவிட்டனர் வேட்பாளராக நியமிக்கப்பட்டவர்களும் நியமனத்தை எதிர்பார்க்கின்றவர்களும் காங்கிரஸ் அங்கத்தவர்களாகக்கூட்டணியில் இருக்கிருர்கள். தொகுதி அடிப்படையில் பங்கு போடுவதில்தான் அவர்களுடையஒற்றுமை கொள்கை அடிப்படையில் தான் மலரவேண்டும். கூட்டணியினர் தாம் பாராளுமன்றம் சென்றல் எந்த ஒரு அரசாங்கத்துடனும் ஒத்துழைக்கமாட்டார்கள் எனவும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளமாட்டார்கள் எனவும் கூறியுள்ளனர். ஆனல் பிரதமர் திருமதி பண்டாரநாயகா, கிளிநொச்சிக் கூட்டத்தில் கூட்டணியினரோடு மொழி சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்ததாக கூறினர். இதுபுதிதாக இருக்கின்றது ஏனெனில் வட்டுக்கோட்டை தீர்மானத்தின்படி தனித் தமிழ் நாடு உருவாக்குவதாக தீர்க்கப்பட்டது. இத்தீர்ப்புக்குப்பின், பிரதமருடன் மொழி சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளை இக் கூட்டணியினர் எப்படி நடத்தியிருக்கலாம்" இவ்வாறு தமிழ் மக்கள் இயக்கத் தலைவரும் ஊர்காவற்றுறை வேட்பாளருமான திரு.யோகேந்திரா துரைசுவாமி நயினதீவில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

"தமிழினத்தின் இழந்த உரிமைகளைப் பெறுவததற்கு அடிப்படையான பலத்தை முதலில் ஈட்டிக்கொள்ள வேண்டும். பொருளாதாரம், சமூக ஒருமைப்பாடு, தமிழ் பிரதேசங்களின் பாதுகாப்பு என்பன வற்றை அரன் செய்யாது வெறுஞ் சுலோகங்களை முன் வைத்து பெறுகின்ற தேர்தல் வெற்றிகளினல் இனத்திற்கு எந்தவித ஆக்கத்தையும் பெற்றுத்தர முடியாது.

"தமிழினத்திற்கு தன்னைத்தான் ஆளும உரிமையுண்டு முதலில் நாம அரசியல் பொருளாதார சமூக ரீதிகளில் பலப்படுத்தி அடிப்படை உரிமைகளைக் குறுகியகால திட்டங்களின் பயனை வென்றெடுப்பின், தமிழினம் சுயமரியதையுடனும் கௌரவத்துடனும் வாழும் என்பது திண்ணம்." (அ)

# மாஜி டி. ஐ. ஜிக்கு ரிமாண்ட்

புதுடில்லி, ஜூலை 17
முன்னள் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருவர் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிந்தார் என்ற இந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலை காவலில் இருந்து பிணையில் விடுதலை செய்யுமாறு அவரது சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தாக்கல் செய்த விண்ணப்பத்தை புதுடில்லி, மட்ரபோலிட்டன் மாஜிஸ்திரேட் நிராகரித்தார்.

அவரைக் காவலில் வைப்பதற்குப் போதுமான ஆதாரங்களை மத்திய புலனாய்வுத் துறை நீதிமன்றத்திற்குக் காட்டியுள்ளது என்று மாஜிஸ்திரேட் தெரிவித்தார்.

## எம். பி.க்கள்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யேற்ற உங்களுக்கு பூரணசுதந்திரமுண்டு."

இன்று நாட்டில் எங்குமே ஊழல்கள் மலிந்துள்ளன.

அண்மைக காலத்தில் பல எம். பி.க்களுக்குஎதிராகலஞ்ச ஊழல் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்த போதிலும் சில எம்.பி.க்கள் மீதுமட்டுமே விசாரணைகள் நடைபெற்றன.

ஊழல் குற்றம் சாட்டப்பட்ட சகல எம். பிக்கள் மீதும் விசாரணைகள் நடைபெறும் அதே வேளையில் லஞ்ச ஊழலை நாட்டிலிருந்து பூண்டோடி அழிக்கவும் ஐ. தே. க. உறுதி பூண்டுள்ளது. (இ)

## இப்படி—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடையாள அட்டையும் இல்லாவிடின் தேர்தல்அதிகாரியின் உதவியுடன் வாக்களிக்கலாம்.

கடந்த 1975 ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ம் திகதி வாக்காளர் இருந்த முகவரிக்கேவாக்காளர்அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. வாக்காளர் இடம்மாறியிருந்தால் முன்னர்தாம் கடிதங்களைப்பெற்று வந்ததபால் அலுவலகத்திற்குச் சென்று தமதுவாக்காளர் அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கொழும்பில் உள்ளவர்கள் மத்திய தபால் அலுவலகத்துடன் இதுவிடயமாகத் தொடர்பு கொள்ளவேண்டும்.

அரசாங்கஊழியர்கள் வாக்களிப்பதற்கு 4 மணி நேர லீவு வழங்கப்படும்.

நடந்தோ, இ. போ. ச. பஸ்களிலோ, ரயில்களிலோ சென்று வாக்களிக்க தேர்தல் சட்டம் வழிவகுக்கிறது.

வாக்குச் சாவடிகளுக்கு வெளியே வாக்காளர் அறிந்துகொள்ளவேண்டிய அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கும்.

ஒரு தடவைக்கு மேலாக வாக்களிக்க முற்பட்டால் கடுழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும்

21 ம் திகதி காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை வாக்களிக்க முடியும்.

தேர்தல் முடிவுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அறிவிக்கும்." (உ)

## இ. போ. ச.—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தன் பின்னரே வேலை நிறுத்தம் கைவிடப் பட்டது. தற்போது தேர்தல் நெருங்குவதால் இவ் பஸ் சேவையை நடாத்துமாறும் தேர்தலின் பின்னர் புதிய பஸ்களைத் தருவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியாகக் கூறப்பட்டுள்ளது.

பருத்தித்துறை டிப்போவை சேர்ந்த ஊழியர்கள் இன்று திங்கட்கிழமை வேலைக்குத் திரும்புவார்கள்.

## இன்றைய திருவிழா

யாழ்ப்பாணம், திங்கள்
வண்ணைசிவன் கோவில் 7ந் திருவிழாவாகிய இன்று பகல் திருவிழா 9மணிக்கு ஆரம்பமாகும். மாலை 6 மணிமுதல் 7-30 மணிவரை முத்தமிழ் வித்தகி செல்வி நல்லபிள்ளை நாகமுத்து "வளவர் கோன் பாவை" என்ற பொருள் பற்றிப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

இரவு 7-30 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் பின்னர் அம்பாள் குதிரை வாகனத்தில் திருவீதி வலம் வருதலும் நிகழும். (அ)

தமிழர் விடுதலைக் கூட்டணி

மாபெரும் எழுச்சிக் கூட்டம்

யாழ். கோட்டை மைதானம்

இன்று மாலை 6 மணிக்கு

யாழ். மாவட்ட கூட்டணி வேட்பாளர்கள் உரையாற்றுவர்.

6680

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 18ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.